# கிழக்கொளி



கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க வெளியீடு


Eastern University Employee's Union Publication

"EASTERN MEDICALS"

Pharmaceuticals,
Distributors-
Astron Limited,
Hemas Manufacturing &
Distributor ATLAS

EMC

***54, Main Street, Chenkalady***
Tel : ***065 2240230*** FAX: ***065-2240450***



**INGARAN SUPPLIERS**

Dealers in:
Electrical, Electronic & Furniture

**Uppodai Road, Vantharumoolai**

TP.No.: 065-2240573, 077 9090200, 0775890706
E-mail : nathanthusa@yahoo.com

# கிழக்கொளி

கலை கலாசார காலாண்டுச் சஞ்சிகை

ஒளி : 10 (2008, ஆடி - புரட்டாதி) கதிர்: 03

**பிரதம ஆசிரியர்**

எஸ்.எஸ்.சூரியகாந்தன்

**துணை ஆசிரியர்**

ஏ.ஜெகராஜ்

**சஞ்சிகைக்குழு**

எஸ்.ராஜ்மோகன்

ஆ.நிர்மோகன்

வி.பிரகாஷ்

கே.கதிர்காமத்தம்பி

ஆர்.ராஜ்

**விலை ரூபா 50/=**

**தொடர்புகொள்ள:**

**பிரதம அசிரியர்**

கிழக்கொளி
விவசாய இரசாயனத் திணைக்களம்
கிழக்கு பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை
செங்கலடி

உள்ளே

1. சுவாமி விபுலாநந்தரின் ... 03

2. பிசாசும், இராட்சத ... 07

3. பிரபஞ்சப் பிரகடனம் ... 15

4. இன்றும் நம்பப்படும் ... 17

5. பயன்தரும் வேம்பு ... 18

6. வீட்டுத் தோட்டம் ... 21

7. சிங்களம் மட்டும் ... 24

8. கா ........ கூ ...... மியாவ் ... 28

9. செயற்றிட்ட முகாமைத்துவத்தில் ... 30

10. உலகை உறுத்தும் ஓசோன் ... 33

11. நேரம் தவறாமை ... 36

12. குறுக்கெழுத்துப் போட்டி ... 38

13 கிழக்கொளிச் செய்திகள் ... 39

14. குறுக்கெழுத்துப் போட்டி ... 40

# எமது இதயத்திலிருந்து................

மிக நீண்டகால இடைவெளியின் பின் எம்பாசமிகு வாசகர்களை சந்திப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றோம். எங்கே! கிழக்கொளி மழுங்கிவிட்டதோ! என்று அங்கலாய்த்திருந்த வாசகர்களுக்கு புத்தொளி பரப்ப கிழக்கொளி மீண்டும் ஆரம்பித்தது மட்டுமல்லாமல் இனி வருங்காலங்களில் தன்னொளியை தண்ணொளியாக தொடந்து பரப்ப ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.பல்கலைக்கழக வரலாற்றிலே சரித்திரம் படைத்த ஒரேயொரு பல்கலை ஊழியர் வெளியீடான 'கிழக்கொளி' ஊழியர்களின் அறிவு ஆக்கத்திறனை வெளிக்கொணரும் நோக்கில் உதயமாகியிருந்தும் ஊழியர்கள் காற்றுள்ளபோதும் தூற்றாமல் இருப்பது மனதுக்கு பெரும் கிலேசமாக உள்ளது அதற்காக கிழக்கொளி தன் பொற்கதிர்களை வீசாமல் இருக்க முடியுமா? இனிமேலாவது ஊழியர்கள் தங்கள் ஆக்கத்திறன்களுக்கு எழுத்து வடிவமூட்டி எமக்கு சமர்ப்பணம் செய்வார்களென நம்புகின்றோம். கிழக்கொளி மீது அக்கறை கொண்டு தங்கள் படைப்புக்களை எமக்கு வழங்கிய படைப்பாளிகளுக்கும், ஊக்கமளிக்கும் விளம்பரதாரருக்கும் எமது மனமார்ந்த நன்றி மலர்களை அள்ளித்தூவுகின்றோம்.மிகவும் குறுகிய காலத்தில் வெளிவர வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையால் கிழக்கொளி உரிய கனமின்றித் தெரிவது போல் இருக்கிறது. இருந்தும் கனம் போதுமானதாக இருப்பதாகவே நாம் உணர்கின்றோம். அடுத்த இதழ்களுக்கான தரமான ஆக்கங்களை, படைப்புக்களை, தொகுப்புக்களை தொடர்ந்தும் வரவேற்கின்றோம் / எதிர்பார்க்கின்றோம். சாம்பல் மேட்டு "பீனிக்ஸ்" பறவையாக கிழக்கொளி மீண்டும் உயிர்பெற்று பறக்க ஆரம்பித்துள்ளது. இதன் வளர்ச்சியும், தளர்ச்சியும் வாசகர்களாகிய உங்கள் கரங்களில் தான் தங்கியுள்ளது. வாசகர்கள் வழங்கவிருக்கும் அன்பும், ஆதரவும், நல்லாசியுமே கிழக்கொளி மீண்டும் முன்போல சிறப்புடனும் பெருமையுடனும் கலை, இலக்கிய வானில் பீடுநடை போட்டு உலாவரக்காரணமாயிருக்கும்.

வழமைபோல இவ்விதழும் கட்டுரை, கவிதை, கதை போன்ற அம்சங்களுடன் பொலிவுற்று வெளிவந்துள்ளது. அடுத்த இதழ் மேலும் பல சுவையான அம்சங்களுடன் வெளிவரவுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். வாசகர்கள் சுவை / தேவை என்ன என்பதை கருத்துக்கள் மூலம் எமக்கு அறியத்தந்தால் அதற்கேற்ற தயாரிப்புக்களை பிரசுரிக்க எமக்கு வசதியாகவிருக்கும். ஆகவே இவ்விதழ் பற்றிய இனிப்பான, கசப்பான, புளிப்பான சகல கருத்துக்களையும் எம்காலடியில் போட்டால் அதற்கேற்ப இனிவரும்காலங்களில் கிழக்கொளியை தேன்மாரி பொழியும் சர்க்கரைப் பந்தலாகக் காண்பீர்கள்! தூங்கிக்கிடக்கும் சமூகத்தை எழுப்ப புரட்சிக் கருத்துக்கள் வழங்க முன்வாருங்கள்! மடமை இருளகற்ற அறிவுக்கருத்துக்கள் அள்ளிவீச முன்வாருங்கள்!! அறியாமையை விரட்ட உண்மைக் கருத்துக்களை விதைக்க முன்வாருங்கள்!!! எங்கே! எங்கள் கோரிக்கைகளுக்கு நீங்கள் எவ்வளவு தூரம் செவிமடுத்துள்ளீர்களென்பது அடுத்த இதழ் சான்று பகரும்.

மீண்டும் உங்களை அடுத்த இதழில் நற்கருத்துக்களுடன் சந்திக்கும்வரை அன்பு வாசகர்களிடமிருந்து பாசமுடன் விடைபெறும்.

-பிரதம ஆசிரியர்-

# சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கையிலிருந்து...

*கலாநிதி. செ. யோகராசா*

இன்றைய இளந்தலைமுறையினர் சுவாமி விபுலாநந்தரது வாழ்க்கையிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் கற்றுக்கொள்வதற்கும் பல்வேறு விடயங்கள் உள்ளன. அவை அன்னாரது சிறுபராய வாழ்க்கையிலிருந்தே ஆரம்பிக்கின்றன எனலாம்.

சுவாமி விபுலாநந்தர் மயில்வாகனனாகவிருந்த காலத்திலேயே நன்கு படிக்கவேண்டுமென்ற ஆர்வமிக்கவராக விளங்கியவர். பாடசாலைக்கு நடந்துசெல்கின்ற வேளைகளிற்கூட புத்தகங்களை படித்துக்கொண்டே செல்வார். ஓய்வு நேரங்களில் ஏனைய மாணவர்கள் விளையாடச் செல்கின்றபோது அவர் வகுப்பறையில் இருந்து ஏதாவது வாசித்துக்கொண்டிருப்பார். இவைமட்டுமன்றி ஆச்சரியம் தரும்விதத்திலான அபரா ஞாபகசக்தி அவரிடம் குடிகொண்டிருந்தது. ஒரு தடவை மட்டும் ஒரு நூலை வாசித்தால் போதும்; அதிலுள்ள விடயங்களனைத்தும் அவரது ஞாபகத்தில் பதிந்துவிடும். பின்நாளில் பன்மொழிப் புலமைமிக்கவராக அவர் திகழ்ந்தமைக்கு இத்தியாதி இயல்புகளும் காரணமாயிருந்திருக்க வேண்டும்.

பன்மொழிப் புலமை என்கின்ற போது சுவாமி விபுலாநந்தர் தமிழ்மொழியைவிட சமஸ்கிருதம், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், முதலானவற்றிலும் நிரம்பிய புலமை பெற்றிருந்தமை பற்றிக் குறிப்பிடவேண்டும். இவ்வாறு அவர் பன்மொழிப் புலமை பெற்றுக்கொண்டதில் அவரது சுயமுயற்சிக்கு பெரும்பங்கிருந்துள்ளது. அதாவது தன்முயற்சியால் அவர் கற்றுக்கொண்டதே அதிகமாகும்.

தமது குடும்பப் பொறுப்பினைச் சிறுவயதிலேயே உணர்ந்து கொள்கின்றார். அவர் தமது ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட வேளையில் தமது பாடசாலையை மாற்றிக் கொண்டமைக்கு தமது குடும்பத்தை தானே பார்க்க வேண்டிய நிலைக்குள்ளானமையே காரணமாகும். இத்தகைய பொறுப்புணர்வே பின்நாளில் அவர் தனித்தும் பல்வேறு நிறுவனங்களோடு தொடர்புபட்டும் தமது பணிகள் அனைத்தையும் செம்மையாக முடிக்கின்ற பொறுப்புணர்வை அவருக்கு வழக்கியிருக்கும் என்பதில் தவறில்லை!.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற விதமாக தமக்குச் சரியென்றுபடுவதனை எவருக்கும் அஞ்சாது செய்து முடிக்கின்ற துணிவும் மனத்திடமும் கூட சுவாமி விபுலாநந்தரிடம் காணப்படுகின்றது. இது பற்றி ஒரு தடவை தமது நண்பரொருவருக்கு இவ்வாறு எழுதியுள்ளார். தமிழ் புலவராகிய நாம் கம்பனுடைய வழித்தோன்றல்கள் என்பதையறிய வேண்டும். அவனைப் போல் நாமும் மன்னன் முன்னிலையிலே ஏமாப்போடு நின்று,

"மன்னவனும் நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந்தோ தமிழ் ஓதினேன்"

என்று துணிவாகச் சொல்லவேண்டும். "ஈதல் நமக்குரியதேயன்றி இரத்தலல்ல" எனினும் எழுத்து வீரராக மட்டுமன்றி, செயல் வீரராகவும் இருந்துள்ளார் சுவாமிகள். ஒரு தடவை (1933ல்) அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு அன்றைய சென்னை மாநில அரசின் ஆளுநர் சேர்.ஜோடஸ்பியடெறிக் ஸ்டாவின் வந்த சமயம் பேராசிரியர் இல்லங்களில் ஆங்கில அரசின் கொடிகள் பறந்தன. ஆனால், தமிழ்த்துறைப் பேராசிரியரான விபுலாநந்தர் தமது இல்லத்தில் இந்திய தேசிய காங்கிரஸின் மூவர்ணக் கொடியை துணிவுடன் பறக்கவிட்டார். காவல்துறையினர் சோதனை செய்து அச்சுறுத்தியபோதும் அவரோ கொடியோ இறங்கவில்லை! இவ்வாறே பின்பொரு தடவை சென்னைப் பல்கலைக் கழகத்திலே சுதேச மொழிகளுக்கு உயர்வளிக்கப்படல் வேண்டுமென்ற உணர்வு முனைப்புற்ற வேளையில் அடிகள் பின்வருமாறு முழக்கமிட்டார்.

"சருவகலாசாலை ஏற்பட்டிருப்பது எதற்கோ?
ஏழைச் சனங்களிடமிருந்து பெறுகிற வரிப்
பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாக்களை
சருவகலாசாலைக்குக் கொடுத்து வருவது என்ன காரணத்திற்காகவோ?
சருவகலாசாலையால் அளிக்கின்ற பட்டங்கள் தம்மொழி
மறந்து பிறமொழியிற் பிதற்றுகிற பேதை
மக்களை குறியீடு செய்வதற்குரிய அடிமை
முத்திரையாமோ? அன்றேல் அறிவு நிறை
மாந்தருக்கு கல்விக் கழகத்தினர் கொடுத்துதவும்
அறிவு முத்திரையாமோ? என்றின்னோரன்ன
குறைகளை ஆராய்ந்து நோக்குவது
தேசாபிமான முடைய பெரியார் மேற்பொறுத்தகடனாகும்"

தமது புலமை காரணமாகவும் கல்வித்தகைமை காரணமாகவும் ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும், இந்தியாவிலும் நன்குமதிக்கப்பட்டவர் சுவாமி விபுலாநந்தர். ஈழத்திலும் தமிழகத்திலும் முதற் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தமை காரணமாக உலகிலேயே முதற் தமிழ்ப் பேராசிரியரானவர்.

இராமகிருஷ்ணமிஷன் வெளியிட்ட 'இராமகிருஷ்ண விஜயம்', 'வேதாந்த கேசரி', 'பிரபுத்த பாரத', ஆகிய பிரபல்யமான மூன்று இதழ்களுக்கும் ஆசிரியராக இருந்தவர். அந்நாளில் தமிழக ஆய்வாளர்கள் முன்னுரை பெற ஈழத்து அறிஞர்களுள் முதன்மையானவர்: இவ்வாறான மதிப்பும் கௌரவம் உயர் அந்தஸ்தும் கொண்டவராயிருந்தாலும் ஆரவாரமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். தமக்கு கிடைத்த வருமானத்திலே கூட பெரும்பங்கினைப் பொதுப்பணிக்கு நல்கியவர்.

எதிலும் எளிமையை நாடியவர், சமய வழிபாட்டிலே கூட அது கடைப்பிடிக்கப்படுவதை விரும்பியவர். "வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற பாடல் எழுந்ததன் தாற்பரியமும் இதுவேயாம்!

அறிஞர்கள், கல்வியாளர்கள் என்போரிடம் விசேட மரியாதை கொண்டிருந்தவர் சுவாமிகள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிகளார் இருந்த போது இருந்த புலவர் கந்தசாமி என்பவர் இறந்த வேளையில் இதழியல் பணிக்காக இமயமலைச் சாரலில் வதித்த அடிகளார் புலவர் மீது 'கங்கையில் எழுதிவிட்ட ஓலை' என்ற இரங்கற்பா ஒன்றை எழுதி அனுப்பியிருந்தார். அவ்வேளை அவர் "உற்றாரை யான் வேண்டேன்" என்று என்னால் இருக்கமுடியும். ஆனால் "கற்றாரை யான் வேண்டேன்" என்று என்னால் இருக்க இயலாது என்று குறிப்பிட்டமை இதற்குச் சிறந்த சான்றாகின்றது.

இவ்வாறே அறிஞர்கள், பெரியார்களது மேதைமையை எளிதில் அறிந்துவிடும் ஆற்றலும் கைவரப்பெற்றிருந்தார் அடிகள். நவீன தமிழ்க்கவிதையின் பிதா மகனான பாரதியாரின் மேதைமையை முதன்முதலாக அறிந்துகொண்ட இருவருள் ஒருவராகத் திகழ்ந்தார் அடிகளார்(மற்றொருவர் சோமசுந்தர பாரதியார்). பாரதியாரின் நினைவாக அண்ணாமலையில் கழகமொன்றை நிறுவியது மட்டுமன்றி, ஈழத்தின் பல இடங்களிலும் தமது சொற்பொழிவுகளூடாக பாரதியாரின் புகழ்பரப்பிய முன்னோடியாகவும் விளங்கினார். முதன்முதலாகப் பாரதியார் பற்றிய திறனாய்வுக் கட்டுரை எழுதியவராகவும் அடிகளார் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏழை மக்களிடத்தில் அதிக அன்பு காட்டிய மானிட நேயராகவும் அடிகளார் விளங்குகின்றார். கரந்தைத் தமிழ்ச்சங்கத்திலே அநாதை மாணவரில்லத்தில் இருந்த நொந்து மெலிந்த சிறுவன் மீது அடிகளார் மிகுந்த பாசம் கொண்டிருந்தார். தமக்கு வழங்கப்படுகின்ற ரொட்டி, பழங்களில் ஒரு பகுதியைக் கொடுப்பது, அவனது துணிமணிகளை மடித்துப் பெட்டியில் அடுக்கிவைப்பது, அவனுடன் ஆதரவாக உரையாடுவது என்ற விதங்களில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார். இதனிலும் மேலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்த வேளையில் அருகிலிருந்த சேரி மக்களுடன் நெருக்கமாக தொடர்பு கொண்டு அவர்களது இருப்பிடம் சென்று அவர்களுக்கு பேருதவிகள் பல புரிந்தமை அன்றைய கால கட்டத்தின் மிகுந்த முற்போக்கான செயலாக தலித் மக்கள் எழுச்சி கண்டுள்ள இன்றைய சூழலில் தென்படுகின்றது.

பற்றுக்களனைத்தும் களைந்த துறவியான விபுலாநந்தர் தமிழ் மீது கொண்டிருந்த பற்றுக்கு நிகராக வேறெதனையும் வேறெவரையும் உதாரணமாக காட்டுவது அரிதான ஒன்றாகும். இவ்விதத்தில் இரு வேறு சான்றுகளை இவ்வேளை முன்வைப்பது போதுமானதென்று கருதுகின்றேன். ஒன்று 'பிரபுத்த பாரத' என்ற சமய இதழுக்கு

ஆசிரியராக அடிகளாரிருந்த வேளையில் அவ்விதழில் தமிழ் இலக்கியம் சார்ந்த விடயங்களைத் துணிந்து பிரசுரித்தமை அது தொடர்பாக அடிகளார் அவ்விதழில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"சமயச் சார்பற்ற தமிழ் இலக்கியத்தின் மொழி - பெயர்ப்புக்களைத் தொடர்ந்து வெளியிடுவது என்பது இந்தப் பத்திரிகையின் வரம்பிற்குள் வரவில்லை யென்றாலும் இந்திய பண்பாட்டின் ஒரு பகுதியான தமிழ்ப்பண்பாட்டின் பங்களிப்பைப் பற்றி அவ்வப்பொழுது வெளியிட வேண்டியது நியாயமானதே என முடிவு செய்துள்ளோம். இவ்விதழில் பத்துப் பாட்டைப் பற்றிய செய்திகளை தொகுத்தளித்துள்ளோம். அடுத்து வரும் இதழ்களில் எட்டுத் தொகையைப் பற்றிய செய்திகளைத் தர விரும்புகின்றோம்".

மற்றொன்று, அடிகளார் தமது நண்பரொருவருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நீங்கள் எந்நாளும் தமிழ்த்தொண்டு புரியவேண்டும் கூழுணவுதான் கிடைத்தாலும் தமிழ்த்தாயின் அருளெனக் கருதி தொண்டாற்ற வேண்டும்... தொண்டு புரிவதையே குறிக்கோளாகக் கொண்டு இரவு பகல் ஓய்வற்றுக் கல்வியைப் பெருக்கிப் பொதுக்கழகங்களில் விரிவுரை யாற்றுதல், நூலெழுதல், திங்கள் வெளியீடுகளிலே ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுதல் என்றித்தகைய தமிழ்த் தொண்டுகளைச் செய்து கொண்டு வந்தால் வேண்டிய உயரிடமெல்லாந் தானாகவே வரும்..."

இவை மட்டுமன்றி, அடிகளாரிடம் மிகுதியாகவிருந்த தேசிய உணர்ச்சி, சமய சமரச நோக்கு, உலகளாவிய பார்வை என்பனவும் அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய, பெற்றுக்கொள்ளவேண்டிய முக்கியமான விடயங்களாகின்றன. இவ்விதங்களிலெல்லாம் சமகால ஈழத்தவர்களுள் அடிகளுடன் ஒப்பிடக்கூடியவர் வேறு ஒருவருமிலரென்று துணிந்து கூறலாம்.

# பிசாசும் இராட்சதக் குடைக்காளனும்

பிரெஞ்சு மூலம்: Michel Tremblay
ஆங்கில மூலம்: Michae Bullock
ஆங்கிலவழி தமிழ்: அம்ரிதா ஏயெம்

அவன் பிசாசுக்கெல்லாம் பெரிய பிசாசாக இருந்தான். எல்லாப் பிசாசுகளுக்கும் இருப்பதுபோல அவனுக்கு ஒரு வாலும் இருந்தது. அம்புக்கூர் நுனியுள்ள பிசாசுடைய அந்த நீண்ட வால் தரையில் இழுபட்டுக் கொண்டேயிருக்கும். சுருக்கமாகச் சொல்லப்போனால் வாலுள்ள பிசாசுகளிலெல்லாம் அவன் பெரிய பிசாசு.

வீதியால் போகும்போது அவனைக் கண்ட பெண்கள் எல்லாம் பாவாடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஓட்டமெடுத்தனர். அவர்கள் வீட்டுக்குச் சென்று "நான் பிசாசக் கண்டுட்டன். அங்கே பிசாசு போகுது. நான் அந்த பிசாசக் கண்டுட்டன். சத்தியமா, கடவுளறிய நான் பிசாசக் கண்டது உண்மை." என்று வீட்டை அடைந்தவுடன் அழுதழுது சொன்னார்கள்.

என்றாலும் பிசாசு தனது பாதையில் அலட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து போனான். தன்னைக் கண்டு விலகி ஓடுபவர்களைப் பார்த்து புன்முறுவலும் செய்தான்.

அவன் ஒரு மதுக்கடைக்குப் போனான். "குடிப்பதற்கு ஏதாவது கொண்டு வா" என்று கத்தினான். ஏதோவொன்று அவனுக்கு குடிப்பதற்கு கொடுக்கப்பட்டது. மதுக்கடைக்காரன் பயத்தால் கலவரமடைந்தவனாகக் காணப்பட்டான்.

"நீ பிசாசப் பார்த்து பயப்படுறாயா?; என்று பிசாசு கேட்டான். கோழையாக "ஓம்" என்றான் மதுக்கடைக்காரன். பின்னர் பிசாசு ஹோவென்று சிரித்தான்.

"மதுக்கடைக்காரனே உன்ர வைன் நன்றா இருக்கிது. நான் மீண்டும் ஒருக்கா பிறகு வாறன்" என்றான்.

"மதுக்கடைக்காரன் தனது தலையைத் தாழ்த்தி, மதுக்கடைக்காரன் அழுக்காகாமல் முன்னால் கட்டும் துணியில் பிசாசு தனது கைகளைத் துடைத்தபோது, அந்த வெள்ளை நிறமான துணி மேலும் அழுக்காக மாறியது. அந்தத் துணியில் இறைச்சிக் கறிகளினதும், மரக்கறிகளினதும் கறைபடிந்த தடங்கள் காணப்பட்டன. அதில் நிலக்கரியின் கறுப்புத் தழும்புகளும் இருந்தன. ஓவ்வொரு காலைப் பொழுதிலும் பற்றவைக்கும்போது அடுப்பு இட்ட தழும்புகள் அவை.

"இதுதான் அது. நான் கொஞ்சம் நல்ல வைனை குடிக்க யோசிச்சிருக்க வேணும்." என்று மதுக்கடைக்காரன் யோசித்தான். ஆனால், பிசாசோ, எல்லாப் பிசாசுகளும் மற்றவர்கள் யோசிப்பதை அனுமானித்துக் கண்டுபிடிப்பதுபோல, மதுக்கடைக்காரன்

யோசித்ததையும் கண்டுபிடித்து சத்தம்போட்டுச் சிரித்தான். சில நேரம் தனது தொடைகளில் அடித்துக் கொண்டும் சிரித்தான்.

சிலர் மதுக்கடைக்குள் புதிதாக நுழைந்தபோது பிசாசு அமைதியில் மூழ்கினான். அங்கே அழகிய சுந்தரவதன இளைஞன் இருந்தான். முகத்திலே தண்ணொளி போன்ற எழில் பொழிகிற பையன் அவன்.

"நான் கேட்கிற முரசுச் சத்தம்; எங்கேயிருந்து வருகுது" என்று கேட்டான் பிசாசு.

"எனக்குத் தெரியாது. நான் பிறந்ததிலிருந்து இந்த முரசுச் சத்தம் நான் எங்கு போனாலும் அதுவும் என்னோடயே வருகுது. ஆனா அது எங்கேயிருந்து வருகுது எண்டு எனக்குத் தெரியாது. அது எப்பவும் ஒரே மாதிரியாத்தான் இருக்குது. அது என்கூடவேதான் வந்துகொண்டு இருக்குது". என்றான் பையன்.

பிசாசு எழுந்து போய் பையனுக்கருகில் அமர்ந்தான். "நீ போர் வீரனா?" என்று பிசாசு கேட்டான். அந்த நேரத்தில் முரசு முழங்கும் சத்தம் நின்று போனது.

"போர் வீரனா..?, அப்படியென்றால் என்ன..? " என்று மீண்டும் பையன் கேட்டான்.

"என்ன..! அப்ப.. உனக்கு போர் வீரனெண்டால் என்னெண்டு உண்மையிலேயே தெரியலையா? " என்று பிசாசு கோபத்துடன் கத்தினான்.

குசினிப் பக்கம் போய்க்கொண்டிருந்த மதுக்கடைக்காரன் திரும்பி வந்து "போர்வீரனெண்டா எனக்கும் ஒண்டும் தெரியாது"என்று சொன்னான்.

"ம்...ம்... நல்லம், எல்லோரும் வாங்கடா. போர் வீரனெண்டா போரை உருவாக்குபவன்.." என்று பிசாசு கத்தினான்.

"போர்..! போர்..!' அப்படியென்டா என்ன? என்று சுந்தரவதன பையன் கேட்டான்.

"ஏய்..., உனக்கும் போரெண்டா என்னவெண்டு தெரியலையா, அடப் பாவமே.." என்று பிசாசு நக்கலாகக் கொக்கரித்தான்.

"இல்ல.. இல்ல.. அந்தச் சொல்லே எனக்குத் தெரியாது" என்று அப்பாவித்தனமாக பையன் சொன்னான்.
அப்போது, மிகுந்த கோபத்துடன் தனது தலையை தனது கைகளால் பிடித்தவாறு "நான் போரக் கண்டுபிடிக்க மறந்திட்டனா? போர உருவாக்கிற வழிகள கண்டுபிடிக்க மறந்திட்டனா?." என்று கூவலுடன் கத்தினான்.

மதுக்கடைக்கு வெளியே வீதியோரத்தில் ஒரு சின்னப் பெண் பாடிக்கொண்டிருந்தாள்.

மாது ஒருத்தி படலையைத் திறந்தாள்.
மரணம் என்று பிசாசு கத்தினான்.
அந்த மாதொருத்தியோ மரணமாகிப் போனாள்.
அவளது ஆன்மா நரகத்திற்கு பறந்தது.

"எனக்கு ஒரு நிலககரித் துண்டு தா" என்று பிசாசு கத்தினான். அவனுக்கு ஒரு துண்டை மதுக்கடைக்காரன் கொடுத்தான். "இது பெரிசில்ல. எனக்கு அதவிடப் பெரிய துண்டு வேணும்" என்றான் பிசாசு அப்போது மதுக்கடைக்காரன் தன்னிடமிருந்த மிகப் பெரிய துண்டைக் கொண்டு கொடுத்தான்.

"இதவிடப் பெரிசா வேணும்"
"இதவிடப் பெரிசு, எனக்கிட்ட இனி இல்ல. இதுதான் இருந்திச்சி. எனக்கிட்ட இருந்த பெரிய துண்டுகளிலெல்லாம் பெரியது இதுதான்."

"இதுதான் உன்னிடமிருந்த பெரிய துண்டென்றா பரவாயில்ல. .. பாப்பம்.." என்று பிசாசு கூப்பாடு போட்டான். பின் மேசையில் ஏறி பின்வருவமாறு உரையாற்றத் தொடங்கினான்.

"உங்களில யாருக்கு போரெண்டா என்னெண்டு தெரியாதோ, அவங்கெல்லாம் காத கூர்மையாக்கிக் கொள்ளுங்க"

மதுக்கடைக்குள் முணுமுணுப்புக்களும் ஆரவாரங்களும் கேட்கத் தொடங்கின. குழப்பம் உருவாகும்போல் இருந்தது. மதுக்கடைக்காரன் கொஞ்சம் கஸ்டப்பட்டு ஆரவாரம் செய்தவர்களை இருக்கையில் இருக்கச் செய்தான்.

"இந்த சுவரப் பாருங்க.." என்று தொடர்ந்தான் பிசாசு. "இந்த ஒண்டுக்குமே உதவாத நிலக்கரித் துண்டால போரெண்டா நான் என்னெண்டு காட்டப் போறன். பின்னர் சுவரை நோக்கி சுழன்று மிகுந்த கோபம் கொண்டவனாக பிசாசு சுவரில் வரையத் தொடங்கினான். அவன் ஒரு இராட்சத குடைக்காளானை வரைந்தான். மதுக்கடையின் சுவர் பூராக அந்த இராட்சத குடைக்காளான் முளைத்திருந்தது. வரைந்து முடித்து, முளைக்கச் செய்த பின்னர், பிசாசு நின்ற மேசையிலிருந்து இன்னொரு மேசைக்கு பாய்ந்து பின்வருமாறு பிரகடனப்படுத்தினான்.

"இப்ப.. நீங்க எல்லாம் இருக்கீங்க. நான் உங்க எல்லோருக்கும் உங்கட போரெண்டா என்னெண்டு வரைஞ்சு காட்டிட்டன். இது சின்னப் போர். எனக்கு அவன் தந்த நிலக்கரித்துண்டு, உண்மையான பெரிய போர வரைஞ்சி காட்ட முடியாதளவிற்கு சின்னது எண்டபடியால, நான் உங்களுக்கு வரைஞ்சு காட்டினது சின்னப்போர்தான்" என்றான் பிசாசு.

எல்லோரும், கைதட்டி ஆரவாரம் செய்து பிசாசைப் புகழ்ந்து விட்டுச் சென்றார்கள். அங்கே பிசாசையும், மதுக்கடைக்காரனையும், எழில்பொழிகிற சுந்தரவதனப் பாலப் பையனையும் தவிர வேறு எவரும் இல்லை.

"என்னெண்டாலும் இது சின்னக் குடைக்காளான்தான். இது சும்மா சாதாரண அளவுதானே இருக்கும்" என்றான் அப்பாவித்தனமாக பையன்.

"போர்வீரனென்டா, இந்தமாதிரி குடைக்காளான்கள வளர்க்கிற ஆக்கள் எண்டு உனக்கு இப்பவாவது விளங்குதா?.. உனக்கு இப்ப... எதயுமே விளங்கிக் கொள்ள ஏலாது." என்று பிசாசு தனது வாலைச் சுருட்டியவாறு கூறினான்.

"அதெல்லாத்தையும் விடு. அந்த குடைக்காளான் சாதாரண காளான்மாதிரி இல்ல எண்டாவது உனக்குத் தெரியுமா?... ம்..ம்.. அதெல்லாம் கிடக்கட்டும்... ஆகக் குறைஞ்சது துப்பாக்கியெண்டாலாவது உனக்கு என்னெண்டு தெரியுமா?"

"ஓம்"

"ம்.., அதுவும் ஒரு சாமான்தான். ஆகக் குறைஞ்சது அந்த ஒரு சாமானையாவது நான் கண்டுபிடிக்க மறந்துபோடல. உனக்கிட்ட துப்பாக்கி இருக்கிதா?..

"ஓம்;

"ஓடுரா..!, ஓடு.!... உடனே போய் அதனை எடுத்துவாடா. போர் உனக்காக காத்துக்கிருக்க ஏலாதுரா. இவ்வளவு நேரம் அது காத்திருந்தது போதும்டா? ஓடுரா... ஓடு.."

வாலிபன் போய் தனது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வந்தான். அதற்கு இடைப்பட்ட நேரத்தில் மொடாக் குடிகாரனாகிய பிசாசு இன்னுமொரு போத்தல் வைனை குடித்தது முடித்துவிட்டிருந்தான்.

மதுக்கடைக்காரன் சுவரிலிருந்த குடைக்காளானைப் பார்த்தான். தலையைச் சொறிந்தவாறே "என்ர அம்மாடியோவ்.. என்ன பெரிய குடைக்காளான்!. என்ன மாதிரி, இந்தக் கரித்துண்டால எப்பிடிக் கீறியிருக்கான்" என்று கூறிவிட்டு குசினிப் பக்கம் சென்றுவிட்டான்.

பிசாசு மகிழ்ச்சி இழந்தவனாக காணப்பட்டான். "என்ன மொக்கன். மடையன், தல கழண்டவன் நான். என்ர மண்டக்குள்ள என்ன இருக்குதோ. நான் செய்ய வேண்டிய வேல எவ்வளவோ கெடக்குது. தேவையில்லாம வேற வேலயெல்லாம் செய்யறன். நான் போர, சண்டைய எப்ப உருவாக்கப் போறனோ? எனக்கே தெரியாது. ம்.. பரவாயில்ல ம்.. அதுக்கு கொஞ்சம் காத்திருந்தா ஒண்டும் கொறஞ்சு பொயிடப்பொறதில்ல. நெசமான போர் எண்ட தேனை, அந்தத் தேனின்ர சுவைய அறிய, இந்த தேனை கூட்டிலிருந்து வடிச்சி அவங்களுக்கு கொடுக்க வேணும். நான் முதன் முதலா செய்ய வேண்டிய வேல அதுதான். அவங்களுக்கு போர் எண்டா என்னெண்டு தெரியாதாம். பிசாசு மதிக்கும், பிசாசின் கௌரவப் பிரஜைகளே, போரெண்டா என்னெண்டு தெரிய அவங்களுக்கு ரொம்ப காலம் பிடிக்காது. அவங்கட எல்லோரின் முகங்களிலயும் நான் ரொம்ப நேசிக்கிற என்ர அன்பான போர் ஆரவாரப்படத் தொடங்குது"

பையன் தனது துப்பாக்கியுடன் ஏற்கனவே வந்திருந்தான். பையனின் துப்பாக்கியை பிசாசு கண்டவுடன், பிசாசின் கோபம் இரட்டிப்பாக மாறியது. அதைத்தான் அவர்கள் துப்பாக்கி என்கிறார்களா? அவர்கள் அறிவீனத்துக்காகவன்றி வேறு எதற்காக பயன்படுத்த வெளியே எடுக்கிறார்கள். எல்லோரும் கறைபடிந்தவர்கள். களங்கமானவர்கள். வெறுக்கத்தக்கவர்கள். அவர்கள் ஊனமான ஈனப் பிறவிகள். பிசாசு துப்பாக்கியைப் பிடித்திழுத்து அதனை முறுக்கினான். பையன் ஆச்சரியத்தால் கண்களைத் திறந்து சத்தம் போட்டான்.

பிசாசு நெருப்புக்கு அருகில் போனான். குழலெடுத்து ஊதினான். உடனே அருமந்தமான ஒருவருமே கண்டிருக்காத துப்பாக்கியாக அதனை மாற்றினான்.

“நான் அத தொட்டுப் பார்க்கட்டா?.” என்று பிசாசு கேட்டான்.

“ம்.. நல்லம்.. இது உன்ரதான்... நான் உனக்கு இதனைத் தாறன்” என்று பிசாசு பதிலிறுத்தான். இதற்கு பையன் நன்றி கூறினான்

“எனக்கிட்ட நன்றி மட்டும் சொல்லாத.. அதெல்லாம் என்ன எப்போதும் ஏமாத்தற வேல மாதிரி”.

அந்தச் சுந்தரவதன எழில் பொங்கும் வாலிபப் பையன் துப்பாக்கியை கட்டியணைத்து முத்தமிட்டான். அதனை ஒரு பெண்ணாக நினைத்து கட்டிப் பிடித்து நடனமாடத் தொடங்கினான்.

“நீ உன்ர துப்பாக்கியத்தான் காதலிக்க வேணும். ம்.. என்ன நான் சொல்றது விளங்குதா?..” என்றான் பிசாசு. “ஓம்.. உண்மைதான்..” என்றான் பையன் நடனமாடிக்கொண்டே. சைகை மூலம் பிசாசு அவன் நடனமாடுவதை நிறுத்தி, மேசைக்குப் பின்னால் போகச் செய்தான்.

“அயல் நாட்டை, ஆக்கள் எப்பிடிக் கூப்பிடுறாங்க எண்டு தெரியுமா?. அந்த அயல் நாடும் உன்ரதான் தெரியமா?” என்று பையனிடம் பிசாசு கேட்டான். பையன் அதிர்ச்சியடைந்தவனாகக் காணப்பட்டான்.

“என்ன!.. பக்கத்துநாடா?.. பக்கத்து நாடெண்டு ஒண்டு இல்லையே இஞ்ச. இஞ்சயிருக்கதெல்லாம் ஒரே ஒரு நாடு. அதுதானே உலகம் என்ற ஒரே நாடு. உலகம் என்கிறது ஒரே ஒரு நாடுதானே!” என்றான் பையன். பையனின் எழில் பொழிகிற சுந்தரவதன முகத்தில் ஓங்கி பலமாக ஒருஅறைவிட்டான். அந்த ஒரு அறை அவனை இரு முறை கிறுக வைத்தது.

“யாராவது, எப்போதாவது இதமாதிரி அப்பாவித்தனமான மக்கள பார்த்திருக்கீங்களா?..” என்று பிசாசு உறுமினான்.

“உலகம் என்பது ஒரு நாடாம்,.. மடையன்கள்.., மொக்கன்கள்.., பைத்தியக்காரன்கள். இவனுகள்ள தலைக்குள்ள என்ன களிமண்ணா இருக்கிது. எல்லோரும் கேளுங்க. நான் சொல்றன். போர் மூழுறதுக்கு குறைஞ்சது ரெண்டு நாடுகளாவது தேவை தெரியுமா? மூடச்சனங்களே. ஆற்றுக்கு அக்கரையிலுள்ள அடுத்த ஊரை எல்லோரும் பக்கத்து நாடு எண்டு எடுத்துக்குங்க. அதுதான் எங்கட எதிரியின் நாடு. பைத்தியக்கார மொக்கன்களே! ஏங்களுக்கு எதிரி எண்டா என்னெண்டு தெரியாதெண்டு யாராவது சொல்லுங்கடா பார்ப்பம். ஒருத்தனும் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னா பளார், பளார் எண்டு ரெண்டு தருவன். கவனம். நீங்க எல்லோரும் இப்போதிருந்தே அடுத்த ஊர் மக்கள வெறுக்கவேணும். அவங்க எல்லோரயும் மனப்பூர்வமா வெறுக்கோணும். என்ன நான் சொல்றதெல்லாம் விளங்கிச்சா?”

“ஆனா நான் கட்டப்போற பெண்ணை...” என்று பையன் இழுத்தான்.
“நீ கட்டப்போற பெண்ணைக்கூட.. அவள நீ மற்ற ஆக்கள விட கடுமையா வெறுக்கோணும். நீ அவங்க எல்லோரையும் வெறுத்தொதுக்கி, எல்லோரையும் சாகவை”.

பையன் குதித்துக் கொண்டே "என்ர இந்தத் துவக்காலயா?" என்று கத்தினான்.

"அதுக்கு எனக்கு ஏலாது: நாங்க துப்பாக்கி வச்சிருக்கிறது பறவைகள, மிருகங்கள கொல்றதுக்குத்தான்.."

"நீ உன்ர துவக்காலதான் அவங்கள கொல்ல வேணும். ஏனென்டா முதலாவது போர் அப்படித்தான் துவங்க வேண்டியிருக்குது. நீதான் முதலாவது போர் வீரனாகவும் இருக்கப் போகிறாய்".

"அப்ப நீ என்ன சொல்லுறாயெண்டா, போரை உருவாக்கோணும் எண்டா மக்கள கொல்லோணும் எண்டு?." என்று இராட்சதக் குடைக்காளானைப் பார்த்தவாறு பையன் கேட்டான்.

"அதெல்லாம் சரி, போரை உருவாக்கோணும் எண்டா மக்கள கொல்ல வேணும் எண்டுதானே அர்த்தம். அதுவும் ஆயிரக்கணக்கான மக்களக் கொல்ல வேணும். என்ன வேடிக்கை இது! எண்டு பாரன் நீ!"

"அப்ப இராட்சத குடைக்காளான்" என்று வினவினான் பையன்.

"இராட்சத குடைக்காளான்தானே?.. அது பிந்தி வந்து சேர்ந்திடும். மிகவும் பிந்தித்தான் அது வந்து சேரும். நீ அப்போ இருக்க மாட்டாய். செத்துப் போயிருப்பாய்."

"என்ன!. என்னக் கொன்றுபோடுவாங்களா?"
"ம்.. அப்படியும் இருக்கலாம்."
"இந்தப் போரிலதானே.."
"ஓம்.."
"அப்படியெண்டா எனக்கு போர் வீரனாயிருக்க விருப்பமில்லை. எனக்கு போரை உருவாக்க ஏலாது."

பிசாசு மேசை மேல ஏறிநின்று கொண்டு பயங்கரமாக எருமைமாடுபோல உறுமினான். "நான் உனக்கு என்ன செய்யச் சொன்னேனோ, அதத்தான் நீ செய்ய வேணும்" என்று பையனைப் பார்த்து அதட்டினான்.

மதுக்கடைக்காரன் குசினிப்பக்கமிருந்து திரும்பி எண்ணெய்ச் சட்டியை இழுத்துக்கொண்டு கடைக்குள் வந்தான். "நான் இந்தச் சுவரிலுள்ள அளவுக்கு இராட்சதக் குடைக் காளானை எங்கே காணலாம் எண்டு எனக்குச் சொல்ல வேணும்" என்று காளானைக் காட்டிக் கேட்டான்.

"திரும்பிப் போடா குசினிக்கு.. மொக்கா.. அந்தக் காளானை சாப்பிடுவது நீ இல்லடா மாடா. அந்தக் காளான்தாண்டா உன்ன சாப்பிட்டுடும்" என்று பிசாசு கத்தினான்.

பிசாசு மேசையிலிருந்து இறங்கினான். பையனை தோளைப் பிடித்திழுத்து அவனை இருக்கச் செய்து அவனிடம் "போரை விரும்புகிற அந்த மனிதன் நீயாத்தான்

இருக்கோணும் எண்டு நான் நினைக்கிறன். இல்லையெண்டு மட்டும் சொல்லாத. உன்னபத்தி எனக்கு நல்லா புரியுது. நீ ஒருபோதும் யாரோடயெண்டாலும் சண்டை பிடிச்சதை நான் கண்டதில்லதான். எண்டாலும்.. சரியே?, ஏற்கனவே நான் உனக்கு வசைமாரி பொழிஞ்சிருப்பேன், நான் சொல்றத நல்லாக்கேளு. நீ யாரை அதிகம் விரும்பல்லயோ அவங்கள மத்த ஆக்கள் உயர்த்திப் பேசுறத நீ விரும்பமாட்டாய். நீ தனிப்பட்ட ரீதியில் வெறுக்கிற ஆட் களும், வெளிப்படையாக நீ வெறுக்கிற ஆட்களும் நிச்சயமா அங்க இருக்கோணும். அவங்களோடதான் நீ சண்டை பிடிக்க வேணும். அவங்கள நீ வெறுக்கோணும். ஏனெண்டா அவங்களோட நீ சண்டை பிடிச்சுத்தான் ஆகவேணும். காலம்பூரா அவங்கள வெறுத்துக்கொண்டே இருக்கோணும். சண்டை பிடிப்பதற்கான தேவை ஏதாவது இருக்கிது எண்டு நீ நினைக்கிறாயா?.

பையன் தாழ்ந்த குரலில் பின்வருமாறு பதிலிறுத்தான். "ஓம்.. அந்த தேவைய நான் இப்ப உணர்ந்திட்டன். ஆனா நான் சண்டை பிடிக்க விரும்பினது.. விரும்பினது..."

"யாரோட.. யாரோட.." என்று முகம் பிரகாசித்தவனாக பிசாசு ஆனந்தக் கூத்தாடிக் கத்தினான்.

"நான் சண்ட பிடிக்க விரும்பினது என்ர கல்யாணத்துக்கு தடையா நிற்கிற, நான் கட்டப்போற பெண்ணின்ர சகோதரனோட.."

அப்போது உடனடியாக மதுச்சாலையின் கதவினைத் திறந்துகொண்டு தனது எதிர்கால மனைவியின் சகோதரன் தோன்றினான்.

"போ.. உடனே போ..." என்று பையன் காதில் கிசுகிசுத்தான்.

"சந்தர்ப்பத்தை தவறவிடாமல் பாவித்துக் கொள்ளு. ஒருத்தரும் உன்னப் பார்க்கவும் மாட்டாங்க. கேட்கவும் மாட்டாங்க. முதல்ல போய் அவனைக் கோப்படுத்து. அவனுக்கு விருப்பமில்லாத எல்லாத்தையும் கதை. கோபம் வாறமாதிரியெல்லாம் கதை. உடனே சண்டை தானாகவே வந்துவிடும்.

பையன் எழுந்து தான் திருமணம் முடிக்கப்போகும் பெண்ணின் சகோதரனிடம் போய் அவனின் காதிற்குள் என்னவோ கதைத்தான். அதற்கு அவன் கேள்விக் கணைகள் கொண்ட துழாவும் பார்வையை பையன்மேல் வீச ஆரம்பித்தான். அப்போது பையன் அவன் முகத்தில் காறித் துப்பினான். இருவரும் மதுக்கடையைவிட்டு வெளியேறினார்கள். அப்போது பிசாசு ஜன்னலடியிலிருந்து இளைப்பாறத் தொடங்கினான்.

நிசப்தமான இரு நிமிடங்களுக்குப் பிறகு, பையன் மதுக்கடைக்கு மீண்டும் திரும்பினான். அவனின் உடம்ப பூராக புழுதிகள் படிந்திருந்தன. அவனது உடுப்பில் இரத்தத் துளிகள் அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன. அவனின் கண்களில் ஆழமான ஒரு ஒளி தென்பட, அவன் புன்முறுவல் செய்து கொண்டிருந்தான்.

"நான் அவனைக் கொன்றுபோட்டன். நான் அவனைக் கொன்றுபோட்டன்... அவன் சாகிறதப் பார்க்கிறது எவ்வளவு ஆனந்தமாக இருந்திச்சு.." என்று ஆரவாரித்தான்.

மதுக்கடை முற்றத்திற்குள் வெண்கல வாத்தியக்குழு நுழைந்தது. பிசாசின் வெண்கல வாத்தியக்குழு போர் வீரர்கள் போல மெட்டுக்களுடன் வாத்தியங்களை இசைத்துக் கொண்டு நுழைந்தது. அவர்கள் இசைத்தும் பாடிக் கொண்டும் இருந்தார்கள்.

"நாங்க வாத்தியக் குழுவத் தொடருவம்.. நாங்க அடுத்த கிரமத்திற்குப் போய், அந்தக் கிராமத்தாக்களிடம், நீ அவங்கட மகனைக் கொன்றுபோட்டாயென்று சொல்லுவம். அவங்க அவங்களின்ர துப்பாக்கிகள வெளியே எடுத்து உன்னத் தாக்க முயற்சிப்பாங்க. ஆனா உன்ர ஆக்கள் பார்த்துக் கொண்டிருப்பாங்களா? இல்ல.. இல்ல..இல்ல. உன்ர ஆக்கள் வந்து உன்னைப் பாதுகாப்பாங்க. வா! சுந்தரவதனமுடைய எழில் பொங்கும் போர்வீரனே! எங்கட போர் உனக்காக காத்துக்கொண்டு நிற்கிறது " என்று பையனிடம் பிசாசு கூறினான்.

வெண்கல வாத்தியக்குழுவும், பிசாசும், போர் வீரர்கள் எல்லோரும் அயற் கிராமம் இருந்த திசைநோக்கி போனார்கள். வாத்தியங்கள் மென்மையான மெட்டுக்களில் இசைக்க பிசாசு நடனமாடினான். பையன் சிரித்தான்.

அப்போது போர் வீரர்கள் பெருகினார்கள். இரு போர் வீரர்கள் நான்கு போர் வீரர்களாகவும், பின்னர் எட்டு, பின்னர் பதினாறு, பின்னர் முப்பத்தியிரண்டு, பின்னர் அறுபத்தி நான்கு, பின்னர் நூற்றிஇருபத்தெட்டு, பின்னர் இருநூற்றி ஐம்பத்தாறு, பின்னர் ஐநூற்றி பன்னிரண்டு, பின்னர் ஆயிரத்து இருபத்தி நாலு, பின்னர் இரண்டாயிரத்து நாற்பத்தெட்டு, பின்னர் நாலாயிரத்து தொண்ணூற்றாறு...

அங்கே வசைகளும், அவமதிப்புகளும், பின்னர் அடித்தல்களும், பின்னர் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் இருந்தன. மக்கள் ஓடினார்கள். மறைந்தார்கள். தாக்கினார்கள். சுயபாதுகாப்பில் ஈடுபட்டுக்கொண்டார்கள். கொன்றார்கள். கீழே விழுந்தார்கள். எழும்பினார்கள். மீண்டும் விழுந்தார்கள்.

துப்பாக்கிகள் வந்து சேர்ந்தன. எல்லா வகையான துப்பாக்கிகளும், சிறியவைகள், நடுத்தர அளவுடையவைகள், பெரியவைகள், மிகவும் சிறியவைகள், மிகப் பெரியவைகள், பின்னர் பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், ஆயுதங்கள் பொருத்தப்பட்டட விமானங்கள், ஆயுதங்கள் பொருத்தப்பட்டட கப்பல்கள், கார்கள், புகையிரத வண்டிகள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், குழந்தைகளைச் சுமக்கும் ஆயுதம் பொருத்தப்பட்ட வண்டிகள்.

என்றும் நிறுத்த முடியாதவாறு வெறித்தனமாகவும், வேகமாகவும் போராட்டம் வளர்ந்தது. போராட்டம் தொடர்ந்து கொண்டே இருந்தது.ருந்தது...ந்தது....தது.....து.

அப்போது ஒரு நாள், வானம் தெளிவாக இருந்தபோது பிசாசு தனது கையினால் சிறிய ஒரு அடையாளத்தை ஆக்கினான். அப்போது இராட்சத குடைக்காளான் தோன்றியது.

# பிரபஞ்ச பிரகடனம்

வெளியே அந்தகாரத்தின் அழுங்குப்பிடிதான்....
என்றாலும் - உன் 'உள்ளொளியின்'
ஊற்றுக் கண்ணை ஏன் மறந்தாய்......?
தேச வேர்களைத் தின்று தீர்க்க-
பல்வேறு பதாதைகளின் கீழ்

கறையான்களின் முற்றுகை!
திசைகளைக் கூறு காட்டி,
சிங்கத்தின் வாரிசுகள்
இராஜ தந்திரீயம் இயற்றும்
விவஸ்தை அற்ற விற்பன்னங்கள்!

இன்றும்- இளமையின் வடிகால்
நீலமும், மஞ்சளும் என்று நம்பி
வர்ணங்களில் வாழ்வைத் தொலைக்கும்
வாலிப ஞாயிறுகள் எத்தனை...?

போதையின் வலையில்
சிக்கிய பின்பாய், வெளிவரும்
வீயூகம் அறியாமல் கருகும்
விடலை பூக்கள் எத்தனை....?

கலாசாலைப் படியேறியும்
பொருளாதாரப் பந்தயத்தில்
பொருந்தாமல் - விரக்திப் பொதி சுமக்கும்
பரிதாப இளைய 'பரிவட்டம்' எத்தனை....?

எங்கே போகிறோம்............
ஏன் நமது வேர்களை மறந்தோம்...?
சுயநலச் சாயம் தீந்தையாய்
சுரண்டப் படாமல் ஓட்டிய நிரந்தரம்.....
புலம் பெயர் வாழ்வே
மோட்சமெனக் கருதி
உயர்ஸ்தானிகர் ஆலய முன்றலில் நம் சந்ததி...

'வாதங்கள்' (ISMS) மெத்தப் படித்தோம்...
நம் பரம்பரையின் பக்க வாதத்துக்கு
மருத்துவம் அறியாமல் திணறுகிறோம்....!
புரட்சி என்ற போர்வையில்
பொறுப்பின்மை வளர்ப்பதும்,
புதுமை என்ற பெயரில்
அடித்தளம் சிதைப்பதும்
ஆரோக்கியம் தராது!

எங்களின் கரங்கள் -
பிரபஞ்சத்தையே புரட்டும்
வஜ்ர நெம்புகோல் என்கிற (இ)ரகசியம்,
வசதியாய் மறந்தோமா?
அன்று அமெரிக்க மண்ணில்
புது விதி எழுதிய லூதரின் கரங்கள்...
அன்று - பாரதத் தாயின்
அடிமைச் சாசனம் கிழித்த மகாத்மாவின்
அகிம்சா ரெளத்ரம்....
அன்று வியட்நாமிய வயல்வெளியில்
புரட்சி விதை தூவிய பிஞ்சுகள்...

அண்மையில் கொல்கத்தாவையே
சேவையின் திருத்தலம் ஆக்கிய
அன்னை தெரேசாவின் இமாசல இருதயம்
இவற்றுக்கு நாமும்
சொந்தக் காரர் அல்லவோ?

நாளை அல்ல -
இன்றே இளையவர் சக்தியை ஏந்தி
வானம் பொடிபட இல்லை என்றாலும்
நமக்குள்ள எல்லைக்குள்
பிரபஞ்ச பிரகடனம் இயற்றி விட
இளைய தோழரே எழுந்திடுவீரா?.

**ஆக்கம்:** முறையூர் சந்திரசேகரன் சசீதரன்,
அம்மன் கோயில் வீதி,
முறக்கொட்டான்சேனை.

# இன்றும் நம்பப்படும் சகுனங்கள்

பண்டைய காலம் தொடக்கம் இன்றைய நவீனயுகம் வரை சகுனம் பார்த்தல் என்பது மக்களது அன்றாட வாழ்க்கையில் ஒரு சிறு பங்கு வகிக்கிறது. மேலத்தேய நாட்டினரே இதில் அதிக நாட்டம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்

சகுனங்களாக பூனை குறுக்கே செல்லுதல், காகங்கள் சண்டையிடுதல், பல்லி சொல்லுதல், ஆந்தை அலறுதல் போன்றவற்றை குறிப்பிடலாம். அதாவது இயற்கையில் உள்ள அனைத்தும் ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒரு வகையில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இதனால் இயற்கையில் ஏதோ ஒரு பகுதியில் எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் விடயங்களை இன்னொரு பகுதியில் நாம் உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இவை விலங்குகளினதும், பறவைகளினதும் நடத்தையாலும், மனிதர்கள் காணும் கனவுகள் மூலமும் வெளிக்காட்டப்படுகின்றன. இன்று விஞ்ஞானிகள் கூட இவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உள்ளார்கள்.

சகுனங்கள் பற்றி இராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்களிலும் சங்கப்பாடல்கள் பலவற்றிலும் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக மகாபாரதத்தில் கூறப்படும் ஒரு நிகழ்வில் "துரியோதனன் பிறக்கும் போது நரிகள் ஊளையிட்டதாகக் கூறப்படுகின்றது" இது ஒரு கெட்ட சகுனம் எனவும் இதனாலே பிற்காலத்தில் பல கொடுமைகள் இடம் பெற்றதாகவும் மகாபாரதம் கூறுகின்றது.

அதாவது எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் விடயங்களை நாய், பூனை, காகம் போன்ற விலங்குகள் அறிந்து சில சமிஞ்ஞைகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு அறிந்து கொள்ளும் வகையில் அவற்றின் புலன்கள் இசைவாக்கம் அடைந்துள்ளன. இதனை விஞ்ஞானிகள் நிருபித்துக்காட்டி உள்ளனர். எம்மால் கேட்கக்கூடிய ஒலியின் வீச்சு 20HZ-20000HZ ஆகும். ஆனால் விலங்குகள் அவ்வாறு அல்லாமல் குறைந்த, கூடிய ஒலி வீச்சுக்களை கேட்கக்கூடியவை. எனவே அவற்றை ஏதோ ஒரு சைகை மூலம் அவை வெளிப்படுத்துகின்றன.

மேலைத்தேய நாடுகளில் உள்ளவர்களில் அதிகமாக ஆங்கிலேயரே இன்றும் சகுனங்களை நம்பும் பழக்கம் கொண்டு காணப்படுகின்றனர். எமது நாட்டினரிடையேயும் சகுனம் பார்ப்பது இன்றும் வழக்கமாக உள்ளது.

எனவே சகுனங்கள் சில வேளைகளில் உண்மைகளை விளக்குகின்ற போதிலும் அவற்றை நாம் அளவோடு நம்பி வாழ்வதினால் நமது வாழ்வை நலமாக அமைத்துக்கொள்ளலாம்.

*க. கார்த்தியாயினி*

*1ம் வருடம், கலை கலாசார பீடம்*

# பயன் தரும் வேம்பு

எமது சூழலில் இயற்கையாகவே வளர்ந்து நஞ்சுக்காற்றை உறிஞ்சி இலையிலே பொதிந்து, உதிர்ந்து மனிதனைக் காத்திடும் வேம்பானது ஒப்பற்ற மருத்துவக் குணமுடையது. வேப்பங்காற்று புரேகிபிடின்ஸ் என்ற கிருமி நாசினியை ஆவியாகச் சுரந்து மனிதனுக்கு நோயற்ற வாழ்வைத்தரும் வேப்பமரத்தின் கொழுந்து, இலை, பூ, காய், பழம், விதை, ஈர்க்கு, பட்டை, வேர்ப்பட்டை போன்ற பலவும் மருந்தாகப் பயன்படுகின்றன.

## வேப்பந் தாழை

- கால் நடை உணவாகும்.
- உலர் நிலையில் சத்துக்கள் :-

| | |
|---|---|
| மொத்தப்புரதம் | 12.40-18.27% |
| நார்ப்பொருள் | 11.40-23.08% |
| மாப்பொருள் | 43.32-66.60% |
| கொழுப்பு | 2.27 - 6.24% |
| Ca | 0.89 - 3.96% |
| P | 0.1 - 0.3% |

- இளம் இலையில் புரதமும் முதிர் இலையில் நார்ப் பொருளும் அதிகமாகும்.
- இலையில் ஒக்சிசிக் அமிலம் இல்லை. ஆனால், நிம்பின், நிம்பினீன், 6 - டெஸ் - அசற்றைல் நிம்பினின், நிம்பன்டையால், நிம்போலைடு மற்றும் குயிசிடின் என்பன உண்டு.

## வேப்பம் பிசின்

- மரத்தின்வெட்டுப்பகுதியில் பிசின் வடியும். இது வரண்ட முதிர்ந்த மரங்களில் அதிகம் சுரக்கப்படும். இது கிழங்கிந்திய பிசின் (East-India Gum) எனப்படும்.
- இது சாயமாகவும், ஒட்டுப்பசையாகவும் பயன்படும்.
- புகையிடுதல் மூலம் நுளம்பு, கொசுத்தொல்லையிலிருந்து பாதுகாக்கும்.

## வேப்பம் பட்டை

- தோல் பதனிடப் பயன்படும் மற்றும் தைலம் தயாரிப்பிலும் உதவும்.
- 12-16% தனின் உம் 8-11% தனின் அல்லாப்பொருளும் உண்டு.

## வேப்பம் பூ

- தேன் தயாரிக்கப் பயன்படும் ஆனால், இது கசப்பாக இருக்கும்.
- வேப்பம்பூவுடன் சிறிது இஞ்சி, கொத்தமல்லி சேர்த்து துவையல் செய்து காலையுணவில் சேர்த்தல் பித்தப்பை நோய் குணமாகும்.
- பூவில் ரசம் செய்து பயன்படுத்தினால் கர்ப்பநோய் குணமாகும்.
- பூவுடன் மிளகு, சீரகம் சேர்த்து உண்டால் கர்ப்பபிணிகள் நீங்கும்.

- பூவையும் கொழுந்து இலையும் சம அளவில் அரைத்து 5 நிமிடஙகள தலையில் தேய்த்து முழுகினால் பேன் ஒழியும்.

<u>வேப்பம் பழம்</u>

- பழச்சசதையிலிருந்து மெதேன் வாயு தயாரிக்கலாம்.
- காயின் சதையிலிருந்து தைலம் தயாரித்து புண், வீக்கம், தடிப்பு ஆகியவற்றின் மீது பூசினால் அவை குணமாகும்.

<u>வேப்பம் விதை</u>

- 200g வேப்பம் விதையை 300 மிலி வேப்பம் எண்ணெயில் காய்ச்சி ஆறவிட்டு ஆறாத புண், குட்டரோகப் புண்ணில் பூசி வரலாம். நீரிழிவு நோயளிகளின் புண்ணையும் இத்தைலம் குணப்படுத்தும்.
- இவ்விதையிலுள்ள ஒரு தைலம் (Essiantial oil) பயிர் பாதுகாப்பிலும் பயன்படும்.
- வேப்பம் விதையில் 40-45% எண்ணெய் உள்ளது. இதிலிருந்து வேப்பெண்ணெய் தயாரிக்கலம்.
- விதையை இடித்து யூரியாவுடன் பயிரிட யூரியா நீண்ட நாள் நிலைபெறும்.

<u>வேப்பெண்ணெய்</u>

- சுத்தப்படுத்திய எண்ணெயிலிருந்து சவர்க்காரம், முகக்கிறீம், லோஷன்கள், பற்பசைகள் தயாரிக்கப்படுகிறது.
- பயிர்பாதுகாப்புப் பொருளாகவும், பயிர் பாதுகாப்பு இரசாயனங்களுக்கு எமல்சிபையராகவும் (Emulcifier) எண்ணெய் உபயோகிக்கப்படுகிறது.
- எண்ணெயிலிருந்து நிம்பிடால், பைரோனிமின், பொலி ஆல் (Poly ol) என்பன பெறலாம். இவை ராக்கெட்டுகளில் எரிபொருளுக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். இப் பொலி ஆல் இறப்பர் தொழிலிலும் பயன்படுத்தலாம்.
- தோல் பதனிடுவதிலும் இவ் எண்ணெய் உபயோகிக்கப்படுகிறது.

<u>வேப்பம் பிண்ணாக்கு</u>

- இது உரமாகவும், பயிப்பாதுகாப்புப் பொருளாகவும், கால்நடை உணவாகவும் பயன்படுகிறது.
- இதில் 5.2% நைதரசன், 1% பொஸ்போரிக்கமிலம், 1.4% பொட்டாசியம் என்பன உண்டு.
- பிண்ணாக்கிலுள்ள நிம்பிடின் நைதரசன் பசளைகளை நீண்டநாட்கள் நிலைபெற உதவும். நீரைத் தேக்கிப் பயிரிடும் நெற்பயிருக்கு இது மிகவும் அவசியமானது ஆகும்.
- பிண்ணாக்கில் நிறையப் புரதமும் மற்றும் வாலைன், ட்ரிப்டோபான் என்னும் அமினோ அமிலமும் உண்டு.
- இதிலிருந்து புரத நாரும் தயாரிக்கலாம்.

## வேப்பிலை

- புகையிடுதல் மூலம் நுளம்பு, இதர பூச்சுகளுக்கு நஞ்சாகும்.
- உலர்வேப்பிலைகளை பையில் போட்டு அலுமாரி, பெட்டிகளில் வைக்க அந்து, கரப்பான் தொல்லை நீங்கும்.
- இலையை அரைத்து எடுக்கும் சாறு நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும். மற்றும் தென்னை ஓலைப்புழு, சோளம் குருத்து ஈ என்பவற்றையும் கட்டுப்படுத்தும்.
- வெண்டி பயிரைத் தாக்கும் வண்டுகள், இலை சுருட்டுப்புழு என்பவற்றை இலையிலிருந்து மெதனனோல் மூலம் கரைத்தெடுத்த சாறு கட்டுப்படுத்தும்.
- உதிர் இலை பாலைவன வெட்டுக்கிளிக்கு எதிரானது.
- பயறு, உழுந்து, தக்காளி, மிளகாய் என்பவற்றில் அழுகல் நோய் (Damping off) ஐக் கட்டுப்படுத்தும் திறன் இலைகளுக்கு உண்டு.

## வேப்பம் பூ வேப்பம் பட்டை வேர்

- நூற்புழுக் கட்டுப்பாடு.

## வேப்பம் விதை

- அதிகளவில் பூச்சிகளைக் கட்டுபடுத்தும்.
- வேப்பம் விதையைப் பொடி செய்து 100கிலோ பயிர் விதைகளுக்கு 2கிலோ பொடி என்ற அளவில் கலந்து வைத்திருந்தால் பூச்சிகள் தாக்காது.
- விதையை அரைத்து நீரில் கலந்து தெளித்தால் கம்பளிப் புழுக்கள் நீங்கும்.
- வேப்பம் விதையிலிருந்து குருணல் தயாரித்து (பொடி) சோளத்தில் தண்டுப்புழுவை கட்டுப்படுத்தலாம். இதிலிருந்து சாறு தயாரித்து புகையிலையில் புரோடினியப்புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

## வேப்பம் பிண்ணாக்கு

- தொன்று தொட்டு வேப்பம் பிண்ணாக்கை உரமிட்டு பூச்சித் தொல்லை கட்டுப்படுத்தப்படுகிறது.
- இவ்வாறு நூற்புழுக்கள் மற்றும் நெல்லில் தோகைக் காம்பு அழுகல், கருகல் நோய் என்பன கட்டுப்படுத்தப்படுகின்றன.
- நெற்பயிரில் நீலப்பச்சை பாசியின் வளர்ச்சியை மேம்படுத்தும்.
- நெல்வயலில், காபோபியூரான் குருணல் நிலைத்திருக்கவும் வேப்பம் பிண்ணாக்கு உதவுகிறது.
- எலுமிச்சையில் இலைச் சுரங்கப் புழுக்களை கட்டுப்படுத்தப் பயன்படும்.

த. காயத்திரி

Department of Agic .Chemistry

# வீட்டுத் தோட்டம் ஒன்றினை அமைத்தல்

தற்போது நாளுக்கு நாள் உணவுப்பொருட்களின் விலைகளானது மிகவும் விரைவாக அதிகரித்து வருகின்றது என்பது தெளிவான ஒன்றாகும். இதனால் அன்றாடம் தொழில் செய்து பிழைக்கும் மக்களும், ஏனைய பாமரமக்களும் உணவினைப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் பிரயத்தனத்தைச் செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு ஏற்பட்டுள்ள இப்பிரச்சனையைத் தீர்ப்பது அவசியமாகும். இல்லாவிடில் மேலும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலைமை எழலாம். எமக்குத் தேவையான உணவினை எமது வீட்டிலே உற்பத்தி செய்வோமாயின் அது எமக்கு பெரும் நன்மையாக இருப்பதுடன் ஒரு பகுதி செலவையேனும் கட்டுப்படுத்தமுடியும். எனவே எமது வீட்டிலே கிடைக்கும் வளங்களினைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டத்தினை அமைத்து இச்செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

அன்றாடம் நாம் உட்கொள்ளும் காய்கறிகள் எமது உடலிற்கு மிக முக்கியமாகும். உள்ளெடுக்கப்படும் இக்காய்கறிகள் ஊட்டத்தினை அளிப்பதுடன் உணவின் தரத்தினையும் அதிகரிக்கவும் உதவுகின்றது. அண்மைய கால மருத்துவ ஆராய்ச்சித் தகவல்களின் படி சராசரியாக ஒரு நபர் நாள் ஒன்றிற்கு 85g பழங்களையும் 300g காய்கறிகளையும் உண்ணவேண்டும். ஆனால் தற்போதய காய்கறி நுகர்வினைப் பார்க்கும் போது காய்கறிகளின் நுகர்வானது 100g இலும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இந் நுகர்ச்சியினை அதிகரிப்பது அத்தியாவசியமாகும். வீட்டுத்தோட்டங்களில் காய்கறிப் பயிர்ச் செய்கையினைச் செய்வதனால் எமக்குத் தேவையான காய்கறிகளினை உற்பத்தி செய்து அவற்றினை உட்கொள்ள முடியும். இதன் மூலம் உணவின் ஊட்டத்தினை அதிகரிக்கமுடியும் என்பது உறுதி. மேற்கண்ட கருத்துகளை கொண்டு நாம் எமக்கு அன்றாடம் தேவையான இக்காய்கறிகளை நம் வீடுகளில் கிடைக்கும் வளங்களினைக் கொண்டு (சமையலறைக்கழிவுகள், கழிவு நீர் போன்றவை) இக் காய்கறித் தோட்டத்தினை அமைக்க முடியும். இதன் மூலம் கழிவுநீர் தேங்கி நிற்பதனைத் தவிர்ப்பதுடன் இதனால் ஏற்படும் சூழல் மாசுபடுதலினையும் தடுக்கலாம். எனவே ஒரு வீட்டுத் தோட்டத்தினை எவ்வாறு அமைக்கலாம் என சற்று விரிவாகப் பார்ப்போம்.

வீட்டுத் தோட்டத்திற்கான பொருத்தமான இடத்தினைத் தெரிவதே முதல் படி முறையாகும். பொதுவாக வீட்டின் பிற்புறப்பகுதி இதற்காகப் பொதுவாகத் தெரிவுசெய்யப்படும். இதன் மூலம் வீட்டின் சமையலறை மற்றும் குளியலறைக் கழிவுகளினைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அத்துடன் நிலம் இலகுவில் வடிந்தோடக் கூடியதாக இருத்தல் வேண்டும். வீட்டுத் தோட்டத்தினை எந்தவடிவத்திலும் அமைத்துக்கொள்ளலாம், சதுரவடிவ, செவ்வக வடிவிலாக தெரிவு செய்யப்படும் நிலமானது இலகுவாக முகாமைத்துவம் செய்யமுடியும். பொருத்தமான இடம்

ஒன்றினைத் தெரிவு செய்த பின்பு தெரிவு செய்யப்பட்ட இடத்தின் ஒரு மூலையில் கூட்டெருக்குழியினை அமைக்கவேண்டும். கூட்டெருக்குழி என்பது வீட்டில், சுற்றாடலில் பெறப்படும் கழிவுகளை இட்டு அதனை விரைவாக உக்கச் செய்து பயிரிற்கு இடுவதற்காக செய்யப்படும் ஒரு நடவடிக்கையாகும்.

## கூட்டெருக்குழியொன்றினை அமைத்தல்

- கூட்டெரு தயாரிப்பதற்கான இடத்தினை தெரிவு செய்தல்.
- 90cm அகலம், 1m ஆழம், விரும்பிய நீளமுடைய குழி ஒன்றினைத் தயார் செய்தல்.
- வீட்டில் கிடைக்கும், சுற்றாடலில் கிடைக்கும் உக்கக்கூடிய கழிவுகளினை இக்குழியினுள் போட்டு நிரப்பவும்.
- இறுதியாகக் குழியினை மூடி சாணக் கரைசலினால் மேற்பகுதியினை தெளித்துவிடவும்.
- கூட்டெருக்குழியினைப் பின்வரும் காலப்பகுதிகளில் புரட்டிவிடவும்.

  1வது புரட்டல் - கூட்டெருக்குழி நிரப்பி 15 நாட்கள்
  2வது புரட்டல் - கூட்டெருக்குழி நிரப்பி 21 நாட்கள்
  கூட்டெருவினை இரண்டு மாதங்களின் பின் வீட்டுத் தோட்டத்திற்கு இடலாம்.
- வீட்டுத் தோட்டத்திற்கான நிலத்தை மண்வெட்டியினால் கொத்திப் பின்பு இக் கூட்டெருவினை இட்டுப் பின்பு நன்கு மண்ணுடன் சேர்த்துவிடவும்.
- தெரிவு செய்த நிலத்தின் எல்லைப்புறமாக வாழை, பப்பாசி போன்ற பழப்பயிர்களை நடமுடியும். அத்துடன் நிலத்தின் எல்லையைச்சுற்றி சோளப்பயிரினை அல்லது மரவள்ளியை நாட்டுவதன் மூலம் இது ஒரு பாதுகாப்புப் பயிராக குறித்த வீட்டுத் தோட்டத்திற்கு அமையும்.

நேரடியாக தோட்டத்தில் விதைக்கும் பயிர்களான வெண்டி, அவரைப் பயிர்களினை ஒரு புறத்தில் 30cm இடைவெளியில் நட வேண்டும். முழுச்செடியாக அறுவடை செய்யப்படும் தண்டுக்கீரை, பசளி, பொன்னாங்காணி என்பனவற்றை வரம்பின் ஓரமாக நடுதல் வேண்டும். கீரைவிதையினை விதைப்பதற்கு முன்பு அவற்றினை மணலுடன் கலந்து (ஒரு பகுதி விதை: 20 பகுதி மணல்) விதைக்க வேண்டும்.

நாற்று மூலம் நடப்படும் பயிர்களான தக்காளி, கத்தரி, மிளகாய் போன்றவற்றினை வீட்டுத்தோட்டத்தின் பிறிதொரு பகுதியில் நடுதல் வேண்டும். இந் நாற்றுகளினை உற்பத்தி செய்வதற்கு நாற்றுமேடைகளினை உங்கள் வீட்டுத்தோட்டங்களிலே அமைத்துக்கொள்ளலாம்.

இதற்காக ஒரு மாதத்திற்கு முன்பே இந்நாற்றுமேடையினை அமைககவேணடும். நாற்றுமேடைகள் 90cm அகலமான விரும்பிய நீளத்தில் அமைந்த உயர்த்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். பின்பு இந்நாற்றுமேடையில் விதைகளை விதைத்துப் பின்பு 21-30 நாட்களின் பின் நாற்றுகளினைப் பெற்றுக் கொள்ளமுடியும். நாற்றுமேடைகள் நன்கு பராமரிக்கப்படுதல் அவசியமாகும். தக்காளி, கத்தரி, மிளகாய் என்பனவற்றை 30-45cm இடைவெளியில் பிறிதொரு பகுதியில் நடமுடியம். நட்ட பின்பு இரண்டு நாட்களிற்கு ஒரு முறை நீர் பாய்ச்சுதல் வேண்டும் பிற்பருவங்களில் நான்கு நாட்களிற்கொரு முறையும் நீர் விடுதல் அவசியமாகும்.

இவ்வாறு பயிர்கள் வளரும் போது அவற்றிற்கு நோய்த்தாக்கங்கள் ஏற்படலாம். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வேப்பம் எண்ணையுடன் உள்ளிக்கரைசல் என்பன சேர்த்து ஒரு கரைசலாக்கி பயிர்களிற்கு விசிறவும். வீட்டுக்குத் தேவையான காய்கறிகளைத் தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதே வீட்டுத் தோட்டத்தின் மிகவும் முக்கிய நோக்கமாகும். வீட்டுத் தோட்டத்துடன் ஒரு பகுதியாக கால்நடை வளர்ப்பும் உயர்ந்த இலாபத்தினைக் கொடுக்கவல்லது. இதன் மூலம் பயிர்மீதிகளைக் கால் நடைகளிற்கு கொடுக்கமுடியும். கால்நடை வளர்ப்பானது பொருளாதார நிலைமைகளில் தங்கியுள்ளது. எனினும் நாட்டுக் கோழி வளர்பானது மிகவும் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளவர்களாலும் மேற்கொள்ளமுடியும். இதன் மூலம் உங்களின் வீட்டுத் தேவைக்கான முட்டை, இறைச்சித் தேவையினை நிறைவேற்றிக்கொள்ளமுடியும். வீட்டுத் தோட்டத்துடன் கால்நடை வளர்ப்பினை ஒருங்கிணைத்தல் சுயவருமானத்தினைப் பெற்றுக்கொள்ளும் ஒரு வழி முறையாகும்.

வீட்டுத் தோட்டம் ஒன்றினை உங்கள் வீட்டில் அமைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் வீட்டிற்குத் தேவையான காய்கறிகளினைப் பெற்றுக் கொள்வதுடன் வீடுகளினின்று வெளியேறும் கழிவுகளினையும் முகாமைத்துவம்செய்யவும் முடியும்.

*க. யூட் நிதாகரன்*
உதவி விரிவுரையாளர்
விலங்கு விஞ்ஞானத் திணைக்களம்
கி.ப.க

# சிங்களம் மட்டும் சட்டமும் தமிழர் மீதான முதல் இன வன்முறையும் -ஓர் வரலாற்றுப் பார்வை-

சிவஹரணேசன்
உதவி விரிவுரையாளர்-வரலாறு,
கிழக்குப்பல்கலைக்கழகம்

சுதந்திர இலங்கையில்தான் இன ரீதியான வன்முறைகள் உருப்பெற்று வலுப்பெற்றுக் கொண்டன. தமிழர்களும் சிங்களவர்களும் ஒரு துளி இரத்தம் சிந்தாமலும் ஒரு துப்பாக்கி தோட்டாவைக்கூட வீணாக்காமல் 1948இல் சுதந்திரத்தை பெற்றுக்கொண்டனர் இதன் பின்னர் ஆட்சிக்கு வந்த பேரினவாத கட்சிகளினால் இன ஒதுக்கல் கொள்கைகள் அரசியல் கருவியாக்கப்பட்டு இனவாதம் மிகப் பலமாக கட்டியெழுப்பப் பட்டது. இது குறித்து இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவ முடியாது.

## சிங்கக் கொடிச் சர்ச்சை

சுதந்திர இலங்கையின் தேசியக் கொடியை உருவாக்குவதில் 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் இரு வேறுபட்ட கருத்துக்கள் உருவாக்கம் பெற்றுக்கொண்டன "சிங்கத்தில் இருந்துதான் சிங்களவர் தோன்றினர்" என்ற யாதகக் கதையில் சிங்களவர் நம்பிக்கை கொண்டிருந்தனர் இதனால் வரலாற்றுக் காலத்து மன்னரும் சிங்கக் கொடியை பயன் படுத்தி வந்தனர்.

சிவனொளி பாத மலை எல்லா மக்களினதும் புனிதத் தலமாக காணப்படுவதினால் அதனை பிரதிபலிக்கும் முறையில் தேசிய கொடியை தயாரிக்க தமிழர்கள் சார்பில் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. அப்போதய பிரதம மந்திரி டி. எஸ். சேனாநாயக்கா இந்த கோரிக்கையை சிறிதளவேனும் கவனத்தில் எடுத்திருக்கவில்லை. மாறாக சிங்கத்தைக் கொண்ட தேசியக் கொடியை டி. எஸ் இன் அரசாங்கம் அங்கீகரித்தது. தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரதி பலிக்கும் வகையில் சிங்கத்துக்கு முன் மஞ்சள் (தமிழர்), பச்சை (முஸ்லிம்கள்) ஆகிய நிறத்திலான சிறிய கோடுகள் தேசிய கொடியில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இலங்கை வரலாற்றில் முதல் இனவாத உணர்வின் வெளிப்பாடாக இதனை நாம் குறித்துக் கொள்ள முடியும்.

## தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை பறிப்பு

சுதந்திர இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை 1948 இல் பறிக்கப்பட்டமையானது இலங்கை அரசியல் வரலாற்றில் தடம் பதித்துக் கொண்ட கசப்பான மற்றொரு இன ஒதுக்கல் சம்பவமாகும். சம காலத்தில் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் உதிரிக் கட்சிகள் பலவற்றைச் சேர்த்து அமைக்கப்பட்டிருந்தது. சிங்கள மகா சபை மற்றும் சுயேச்சையாக வெற்றி பெற்ற தமிழர்கள் ஆகியோர் கூட்டுச் சேர்ந்திருந்தனர். பின்னர் 1949 காலப் பகுதியில் இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர். இதன் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

இந்தக்கூட்டரசாங்கம், கொண்டு வந்த 1948 ஆம் ஆண்டின் 18 இலக்கச் சட்டத்தின் படி இங்கு வாழ்ந்த 10 இலட்சத்திற்கு மேற்பட்ட தோட்டத் தமிழர்களின் பிரஜா

உரிமை பறிக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அப்பட்டமான இன ஒதுக்கலுக்கு இதனை விட வேறு உதாரணம் காட்டமுடியாது. இந்தியத் தமிழர்களையும் சேர்த்துக் கொண்டால் அப்போதய மொத்த சனத்தொகையில் 23% உயர் நிலையை தமிழர் அடைந்து விடுவர் என்ற அச்சம் இதற்கு காரணமாகவிருந்தது. சுதந்திரம் கிடைத்த அதே ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இனத்தூய்மைப்படுத்தல் இதுவாகும். இந்தச் சட்டம் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பலத்த அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்திற்று.

### தமிழரசுக் கட்சியின் உதயம்

பிரஜா உரிமையைப்பறித்த அரசாங்கத்தில் தமிழ்க் காங்கிரஸ் கூட்டுச்சேர்ந்திருந்தது.இதனால் கட்சியினுள் உள்ளக முரண்பாடுகள் வலுப்பெற்றுக்கொண்டன. சிறுபான்மையினருக்கு துரோகமிழைத்த கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்ததை கண்டித்து எஸ். ஜே. வி. செல்வநாயம் மற்றும் சி. வன்னியசிங்கம் ஆகியோர் பிரிந்து , "தமிழரசுக் கட்சி" யைத் தாபித்தக்கொண்டனர். புதிய கட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும் போது:

" இந்தியத் தமிழரின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டுள்ளது, நாளை இலங்கைத்தமிழருக்கும் இந்தக் கதி ஏற்படாது என்பதற்கு என்ன உத்தர வாதமுள்ளது" எனக் குறிப்பிட்டார்.

### ஐக்கிய தேசியக் கட்சியுடனான முரன்பாடுகளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தோற்றமும்

சுதந்திர இலங்கையின் கூட்டரசாங்கத்தில் பண்டாரநாயக்காவின் சிங்கள மகாசபையும் கூட்டுச் சேர்ந்திருந்தது. இவர்கள் "சிங்கள சுயபாஷை" சட்டத்தை ஏற்படுத்தக்கோரினர். இந்த முரன்பாடு காரணமாக பண்டாரநாயக்கா தனியாகப் பிரிந்து 1951 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை (SLFP) உருவாக்கிக் கொண்டார். இதன் பின்னருள்ள காலப்பகுதியில் இரண்டு பேரின வாதக்கட்சிகளின் இனத்தூய்மை நடவடிக்கைகளுக்கு தமிழர்கள் முகம் கொடுக்க நேர்ந்தது.

1952 இல் டி.எஸ். சேனநாயக்கா இறந்து போனார். இதனைத்தொடர்ந்து அவரது மகன் டட்லி சேனானாயக்கா பிரதம மந்திரியானார்.அரிசி விலை அதிகரிப்பை எதிர்த்து இடது சாரியினர் மேற்க்கொண்ட வேலை நிறுத்த போராட்டத்தைத் தொடர்ந்த டட்லியும் 1953 இல் பதவி விலக நேரிட்டது. இதன்பின்னர் ஜோன் கொத்தலாவல பிரதம மந்திரியானார்.

1955 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரசின் அழைப்பின் பேரில் அங்கு சென்றிருந்த பிரதம மந்திரியிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. சிங்களமும் தமிழும் அரசியல் யாப்புச் சீர்திருத்தின் ஊடாக நிர்வாக மொழியாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்பது அக்கோரிக்கையாகும். இதனை ஏற்றுக்கொண்ட ஜோன் கொத்தலாவல மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இந்த இணக்கப்பாடு தொடர்பில் திரிபு படுத்தப்பட்ட தகவல்கள் சிங்களத் தீவிரவாதிகளினால் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டது. எல்.எச். மெத்தானந்த தேரர் இந்தப்பணியில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டார். கொத்தலாவல தெரிவித்த கருத்தை திரிவு படுத்தி வெளியிட்டார். சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்த்து வழங்கினால் சிங்களவரும் தமிழ் படிக்க நேரிடும் எனவும் இதனால் சிங்கள மக்கள்

தங்களின் தனித்துவத்தை இழந்து போய் விடுவர் எனவும் இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களை விதைத்தார்.

இந்த வாக்குறுதிக்கு எதிராக நாடுதழுவிய வகையில் எதிர்ப்பு அலைகள் எழுந்தன. இதன் மூலம் தமிழ் இனத்துக்கெதிரான எதிர்ப்பலைகள் தொடக்கி வைக்கப்பட்டன. அது மட்டுமல்ல தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.

## 1956ஆம் ஆண்டுத்தேர்தலில் கருவியாக்கப்பட்ட இனவாதம்

இந்த சந்தர்ப்ப சூழ்நிலையை பண்டாரநாயக்கா தமக்கு சாதகமாக்கிக் கொண்டார். சிங்கள மக்களைக் கவரும் வகையில் கீழ்வரும் பிரகடனத்தை வெளியிட்டார். இதன் மூலம் இனவாதத்தை அரசியல் கருவியாக்கிக்கொண்டார். "சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் மொழி தொடர்பில் ஆராய்ந்த அதன் உப குழு மொழிக்கொள்கை ஒன்றை தீர்மானித்துள்ளது. அதன்படி நாட்டின் உத்தியோக பூர்வமொழியாகசிங்களம் பிரகடனப்படுத்தப்படும். அதேவேளை நியாயமான வரை தமிழ் மொழியைப்பயன்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படும்." என அப்பிரகடனம் அமைந்திருந்தது. இதன் மூலம், இலங்கை வரலாற்றில் இனவாதத்தை கருவியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெளிப்படையாகக் கையில் எடுத்தக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து சமகாலத்தில் ஆட்சியில் இருந்த ஜோன் கொத்தலாவலயின் அரசாங்கம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. பண்டாரநாயக்காவின் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு ஆதரவான பல பராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகி பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து கொண்டனர். இந்த நெருக்கடியான நிலையில் வேறு வழியின்றி ஐக்கிய தேசிய கட்சியினரும் இனவாதத்தை கருவியாக்கும் திட்டத்தை கையில் எடுத்துக் கொண்டனர்.

1956 பெப்ரவரியில் களனியில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தக் கருத்தை ஐக்கிய தேசியக் கட்சியினர் பகிரங்கப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் 1956 பெப்ரவரி 16ம் நாள் ஜோன் கொத்தலாவலபாராளுமன்றத்தை கலைத்தார். 1956ம் ஆண்டு பொதுத் தேர்தலில் "தனிச்சிங்களச் சட்டம்" பேரின வாத பிரச்சாரத்தில் முக்கிய கருவியாக கைக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படு தோல்வியைத் தழுவிக் கொண்டது. அரசாங்கத்தை அமைத்துக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் "அரசாங்கத்தை பொறுப்பேற்று 24 மணி நேரத்துக்குள் சிங்களம் மட்டும் சட்டமாக்கப் படும்" எனத் தெரிவித்தமைக்கு அமைய, 1956 ல் யூன் 5ம் திகதி சிங்களம் மட்டும் சட்டமாக்கப் பட்டது. இந்தச் சட்டமூலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சட்டத்தின் மூலம் பண்டார நாயக்கா பௌத்த பிக்குகளையும் இனவாத சிங்களவர்களையும் திருப்தி படுத்திக் கொண்டார். அது மட்டுமல்ல "சிங்கள மக்களின் பாதுகாவலன் " என்ற எண்ணக்கருவையும் உருவாக்கியிருந்தார்.

## தமிழருக்கு எதிரான முதல் வன்முறை

இந்தச் சட்டத்தை எதிர்த்து, குறித்த மசோதா சட்டமாக்கப்பட்ட யூன் 05ம் நாள் காலிமுகத் திடலில் தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை

ஏற்படுத்தியிருந்தனர். அதே வேளை "நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகிக்கப்படும்" என்ற சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பௌத்த குருமாரும் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு ஆதரவானவர்களும் பாராளுமன்றத்தை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டக் காரர்களின் பார்வையில் காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் இருந்த தமிழர்கள் தென்பட்டனர். உடனே ஆர்ப்பாட்டக் காரர்கள் அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஏறத்தாழ 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீ லங்காவின் காவல் துறையினர் எதுவும் செய்யாது பார்த்திருந்தனர் எனக்குற்றம் சாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. நாடுமுழுவதும் இந்த இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. சுதந்திர இலங்கையில் தமிழருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட முதல் இன வன்முறை சம்பவம் இதுவாகும்.

எனவே இந்த தனிச்சிங்களச் சட்டமும் தமிழர்கள் மீதான இன வன் முறையும் கீழ் வரும் வரலாற்று இருப்பை இங்கு ஏற்படுத்திற்று.

01. இலங்கை சுதந்திர மடையும் வரை தமிழருக்கெதிரான இன ஒதுக்கலும் வன் முறைகளும் நடைபெற்றிருக்கவில்லை. பிரித்தானியருக்கெதிரான சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் தலைவர்களின் பங்களிப்பு கனதியாகக் காணப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்கள் இனவாதம் சுதந்திர இலங்கையில் அரசியல் கருவியாக்கப்படும் என்று கனவில் கூடநினைத்திருக்கமாட்டார்கள்.

02. 1956 ஆம் ஆண்டு தமிழருக்கு எதிரான தாக்குதலைத் தொடர்ந்து இன்று வரை பரஸ்பர பகைமை கொண்டவர்களாகவே வாழ்ந்து வருவதனையும் வரலாற்று போக்கில் நாம் அவதானித்துக் கொள்ள முடிகின்றது.

03. 1956, 1958, 1977, 1981, 1983 போன்ற ஆண்டுகளில் தமிழ் மக்களினால் மறக்க முடியாத இன வன்முறைகள் இடம் பெற்றன. தமிழரும் சிங்களவரும் ஒன்றிணைந்து வாழ முடியாது என்ற இருப்பை மேற்போன்ற கசப்பான வரலாற்றுச் சம்பவங்கள் ஏற்படுத்தியுள்ளன.

# கா.........கூ.............மியாவ்......

அன்றையப் பொழுது புலர்ந்து விட்டதால் சூரியன் தன் பொற் கிரகணங்களெல்லாம் அடிவானத்திலிருந்து அள்ளி வீச தயாராகிக் கொண்டிருக்கிறான். நேரமோ ஆறரை மணி ஆனைப்பந்தி பிள்ளையார் கோயில் ஆரம்ப மணி ஒலிக்க "பிள்ளையாரப்பா" என்று இரு கைகளாலும் நெற்றியில் குட்டி பிள்ளையாரை மனத்திரையில் தரிசிக்கின்றேன். இலங்கை வானொலியின் அமங்கல ஒலியுடன் காலைச் செய்தி அறிக்கை கேட்பாருமின்றி, கேட்டால் நம்புவாருமின்றி எதேச்சையாக ஒலிபரப்பாகக் கொண்டிருந்தது. அதை வாசிப்பவரே நம்புவாரோ என்று தான் எல்லோரும் நம்புவார்கள். அன்று சனிக்கிழமை "சனி நீராடேல்" என்ற அமுதவாக்குக்கமைய அன்று எண்ணெய் தோய்த்து முழுக வேண்டும். அன்று உடம்பெல்லாம் எண்ணெய் பூசி காலைக்கதிரவனின் பொற்கதிர்கள் உடலில் பட "சண்பாத்" (என்ன வெள்ளைக் காரன் மட்டும்தானா சண்பாத் எடுப்பது? நம்மவர்கள்தான் இதை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள்) எடுத்துவிட்டு கிணற்று நீரை அள்ளி முழுகும் போது உடலிலுள்ள சூடு பறந்துவிடுவதாக பாட்டி சொல்லுவா..... இப்போ எண்ணெய் விற்கிற விலையில் எண்ணெய் தோய்ப்பதாவது "சண்பாத்" எடுப்பதாவது!! தூரிகையில் பற்பசையைத் தடவி பற்களை ஏனோதானோ என்று துலக்குகிறேன். அன்று விடுமுறையாதலாலும் ஓவர் டைம் இன்மையாலும் ஆறுதலாக துலக்கலாம். வேலை நாளாக இருந்தால் சூரியன் உதிக்கும் முன்னரே எழுந்து பிரஷ்ஷால் மூன்று நான்கு தடவைகள் மேலும் கீழும், உள்ளும் புறமும் இழுத்து விட்டு வாயைப் கொப்பளித்தவுடன் காலைக்கடன்களை பறந்து பறந்து கடுகதியில் முடித்து சோத்தையும் கட்டி எடுத்து காம்பஸ் பஸ்பிடிக்க ஓடும் அஞ்சல் ஓட்டம் ஒலிம்பிக் ஓட்டத்தையும் வென்று விடும்.பற்களைத் தீட்டியபடி வீட்டின் கொல்லைப்புறமாகச் சென்று அங்குள்ள படிக்கட்டில் அமர்ந்து, எதிரேயுள்ள வாழை, தென்னை, அவற்றினூடே போட்டியிட்டு வெற்றி பெற்று உயரமாக வளர்ந்துள் வேம்பு, பப்பாசி மரங்களை நோக்குகிறேன். பறவைகளினதும் வண்டுகளினதும் ஒலியும், ரீங்காரமும் அமைதியைத் தாலாட்ட எங்கியிருந்தோ வந்த ஒரு கருங்குயில் அந்த மஞ்சள் நிறத்தில் நன்கு பழுத்து "சீச்சீ.... இந்தப் பழம் புளிக்கும் " என்று துரட்டிக்கம்பின் உயரத்தையும் தாண்டியிருந்ததால் கைவிடப்பட்ட அந்தப் பப்பாசிப் பழத்தில் அமர்ந்து கூ.....கூ..., கூ.....கூ... என்று கூவியது. குயில் கூவுகிறதே! வசந்தகாலம் பிறந்து விட்டதாலா? இல்லை வசந்தகாலம் பிறந்து விட்டதால் குயில் கூவுகிறதா? எனது ஆராய்ச்சி வாய்க்குள் பற்பசையும் எச்சியும் நிரம்பி விடுவதால் தடைப்பட அவற்றைத் துப்பிவிட்டு சிந்தனையைத் திசைமாற்றுகிறேன். பப்பாசிப்பழம் மருத்துவரீதியாகவும் (உ)ருசி ரீதியாகவும் அதிமுக்கியத்தும் வாய்ந்த ஒரு பழமாகும். அப்படியிருந்தும் அதைப்பறித்துச் சுவைக்க வாய்ப்பில்லாமல் போனமைக்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும்.

குயில் கூ.....கூ... என்று கூவியதே! ஏதற்காக? அல்லது யாருக்காக மீண்டும் ஆராய்ச்சி..... காகம் தான் சாப்பாட்டைக் கண்டால் கா...கா.. என்று மற்றக்காகங்களையும் உண்ண அழைக்கும். குயிலுக்கு அந்தப் பழக்கம் இல்லையே!

கொழும்பிலே தனியாக நிற்கும் ஒரு தமிழன் தமிழில் கத்தி அவனைச் சூழப்போகும் பேராபத்தை உணராத நிலையில் தான் இந்தக் குயில்
கூவியது போல எனக்குத் தோன்றியது. குயிலுக்கு கூடுகட்ட இறைவன் பழக்கவில்லை அதுவும் காரணத்தோடுதான். கூடுகட்டத் தெரியாவிட்டால், முட்டை இடாமலாவது இருந்திருக்கலாம். அதுவும் முடியாது! முட்டை போடுவதென்றால் அதுவும் காக்கையின் கூட்டிலா போடவேண்டும்? போட்ட முட்டைகள் குஞ்சு பொரித்து வளர்ந்து கூவ ஆரம்பிக்கும் போது அவை பல்கலைக்கழகம் புகுந்த புது மாணவர் மாதிரி காக்காவால் 'ராகிங்' செய்யப்படுகின்றன.பாவம் குயிற்குஞ்சு! தன்விதி அதற்கு முன்னரே தெரிந்திருந்தால் முட்டையிலேயே கரைந்து கூழ்முட்டையாகியிருக்குமே! இந்தக் குயிலுக்கு 'சோஷல்' என்றுமே நடப்பதில்லை அதனால் தான் குயில் பப்பாசிப்பழத்திலிருந்து கூவ 'கா...கா' என்று கரைந்தபடி ஒரு அண்டங் காகம் குயிலை நோக்கி வருகிறது.

இந்தக் குயில் ஏன் கூவ வேண்டும்? நன்றாகப் பழுத்துப்போயிருந்த பப்பாசிப்பழத்தை வயிறுமுட்டத்தின்றுவிட்டு ஏப்பம் விடவேண்டியது தானே! குயிலுக்கு கூவும் சக்தியை இறைவன் தடுத்திருந்தால், காக்கையும் குயிலும் ஓரினமாகி வேறினமொன்று தோன்றியிருக்குமே! குயிலைக்குறி பார்த்து ஏவி விடப்பட்ட 70மில்லிமீற்றர் ஷெல் போல பறந்து வந்த காகம் குயிலை ஒரு கொத்துக் கொத்தியது. குயில் தன் பிடியைத்தளர விடாது காக்கைக்குத் திருப்பிக் கொத்தியது. காகமும் குயிலும் கட்டிப்புரண்டன. 'காகமும் காகமும் கட்டிப்புரண்டால் ஆகாது' என்று பாட்டி சொல்லுவா, ஆனால் இது காகமும் குயிலும் தானே! கலைக்காமல் வேடிக்கை பார்க்கிறேன். சண்டை தீவிரமடைந்து உச்சக்கட்டத்தை எட்டிக்கொண்டிருந்தது. இச்சண்டையை நான் மட்டும் தான் இரசித்துக் கொண்டிருக்கிறேன் என்று நான் தப்பாக எடைபோட்டு விட்டேன். மூன்றாவது நபரும் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றார் காகமும் குயிலும் கண்டிப்புரண்டதால் தங்கள் சமநிலையை இழந்தது நிலம் நோக்கி விழ ஆரம்பித்தன. குயிலுக்கு கொஞ்சம் மூளை அத்துடன் அது எடையிலும் காகத்தைவிடக் குறைவு. குயில் தன் சமநிலையையப சிறிது பேணி, காக்கைக்கு மேல் தன்னை உயர்த்த காகம் முதலில் நிலத்தில் விழ , இக்காட்சிகளை எந்தவித சலனமுமின்றி வாழை மறைவிலிருந்து அவதானித்துக்கொண்டிருந்த கடுவன் பூனையார் "மியாவ்"என்று தவளைப் பாய்ச்சலில் பாய்ந்து காகத்தைத் தன் வாய்ச்சிறைக்குள் பிடித்தார். குயிலோ கூவவும் முடியாமல், கத்தவும் முடியாமல் 'இயமலோகம் சென்று மீண்டது போல' கூ...கூ... என்று கூவிக்கொண்டு வானோக்கிப்பறக்க ஆரம்பித்தது. தன் இறுதிக்காலத்தை நெருங்கிவிட்டதாக உணர்ந்த காக்கை 'கா....கா..' என்று கரையமுடியாமல் அலறியது. ஆபத் பாந்தவன், அநாதரட்ஷகன் அருகில் நின்றது. அதற்கு எங்கே புரியப்போகிறது. இவற்றையெல்லாம் பார்த்து இரசித்துக் கொண்டிருந்த எனக்கு காக்கை மீது பரிதாபம் ஏற்பட்டது.

(தொடர்ச்சி.... 37ம் பக்கம்)

# செயற்றிட்ட முகாமைத்துவத்தில் PRINCE அணுகுமுறையின் பங்களிப்பு

- த. டிலாந்தி -

செயற்றிட்டங்கள் என்பது அபிவிருத்தி அல்லது முன்னேற்றம் குறித்து மேற்கொள்ளப்படுகின்றதோர் பாரிய செயற்பாடாகும். இன்று உலகளாவிய ரீதியில் விரைவாக வளர்ந்து வருவதும், எல்லோராலும் பேசப்படுவதுமான விடயமாக செயற்றிட்ட முகாமைத்துவம் காணப்படுகின்றது. அதுமட்டுமின்றி செயற்றிட்ட முகாமையாளருக்கு பாரியளவில் கேள்வியும் நிலவுகின்றது. எங்கெல்லாம் அபிவிருத்தி வேலைகள் உள்ளதோ அங்கெல்லாம் இவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் செயற்றிட்ட முகாமையாளர்கள் பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை உருவாக்குகின்றார்கள். ஆனால் அதிகமான செயற்றிட்டங்கள் தோல்விகளை தழுவுகின்றன. எனவே பின்வரும் காரணங்களினால் செயற்றிட்டங்கள் தோல்விகளை தழுவுகின்றன.

- பொருத்தமற்ற செயற்றிட்ட முகாமைத்துவ அணுகுமுறைகள்
- குறைந்தளவான தொடர்பாடல்
- பயன்படுத்துனரின் ஈடுபாடு இன்மை
- குறைவான திட்டமிடல்
- பிழையான மதிப்பீடு
- போதுமற்ற கட்டுப்பாடு
- பிழையான அட்டவணைப்படுத்தல்
- பல மாற்றங்கள்

செயற்றிட்ட முகாமையாளர்கள் செயற்றிட்டங்களை வினைத்திறனாகவும் வெற்றிகரமாகவும் உருவாக்குவதற்கு பல செயற்றிட்ட முகாமைத்துவ அணுகுமுறைகள் காணப்படுகின்றன. எனவே செயற்றிட்டங்களை உருவாக்கும் போது சரியான செயற்றிட்ட முகாமைத்துவ அணுகுமுறைகளினை தெரிவு செய்யாதவிடத்து அச் செயற்றிட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் ஒதுக்கப்பட்ட செலவீனத்திற்குள்ளும் முடிக்க முடியாத நிலை தோன்றுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் செயற்றிட்ட முகாமைத்துவ அணுகுமுறைகளில் ஒன்றான PRINCE அணுகுமுறையினூடாக செயற்றிட்டங்களை வினைத்திறனாகவும் வெற்றிகரமாகவும் உருவாக்க முடியும்.

PRINCE (Project IN Controlled Environment) என்பது வினைத்திறனான செயற்றிட்ட முகாமைத்துவத்திற்கான நல்ல அமைப்பு முறை (Structured Method) அல்லது செயன்முறையினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறையானது ஒரு செயற்றிட்டத்திற்கு தேவையான பல்வேறுவகைப்பட்ட ஒழுங்குகளையும் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய திட்டத்தை வடிவமைத்து வழங்குதல் எனும் செயற்பாட்டை செய்கின்றது. இவ் PRINCE அணுகுமுறையானது எவ்வாறு செயற்றிட்டத்தை ஒழுங்குபடுத்துவது, முகாமை செய்வது, கட்டுப்படுத்துவது எனும் தொழிற்பாடுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

PRINCE அணுகுமுறையானது எளிதாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் எல்லாச் செயற்றிட்டங்களுக்கும் பொருந்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது. PRINCE செயற்றிட்டங்கள் பின்வரும் இயல்புகளை கொண்டிருக்கும்.

- ❖ செயற்றிட்டமானது வரையறுக்கப்பட்ட எல்லையுள்ள வாழ்க்கை வட்டத்தினை கொண்டிருக்கும்(A Finite And Defined Lifecycle).

- ❖ வளங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும் (Define Amount Of Resources)

- ❖ செயற்றிட்டத்தை முகாமை செய்வதற்கு வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் நிறுவன கட்டமைப்பும் காணப்படும்.( An organization structure with define responsibilities to mange the project)

இன்றைய காலகட்டத்தில் செயற்றிட்ட முகாமையாளர் PRINCE அணுகுமுறையினைப் பயன்படுத்தி செயற்றிட்டங்களை உருவாக்குகின்றார்கள். எனவே PRINCE அணுகுமுறையின கீழ் பின்வரும் செயன்முறையினூடாக செயற்றிட்டங்கள் வடிவமைக்கும் போது அவ் செயற்றிட்டங்கள் வினைத்திறனாகவும் வெற்றியளிப்பதாகவும் காணப்படும்.

- செயற்றிட்டத்தை வழிநடத்தல் :- செயற்றிட்ட வழிகாட்டல் எனப்படுவது செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் அனைத்தும் குறித்த ஒழுங்குமுறைப் பாதையினூடாக முன்னெடுப்பதற்கான அதிகாரத்தை பயன்படுத்துவதாகும்.செயற்றிட்ட முகாமையாளர் செயற்றிட்டங்களை உருவாக்கும் போது அச் செயற்றிட்டங்களை ஒழுங்காக வழிநடத்தல் வேண்டும்.இச் செயற்பாடானது குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் ஆரம்பம் முதல் முடிவு வரை நடைபெறுகின்றது.

- செயற்றிட்டத்தை ஆரம்பித்தல் :-PRINCE அணுகுமுறையின் முதலாவது செயற்பாடாக காணப்படுகின்றது.செயற்றிட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு கட்டளையிடுகின்ற சந்தர்ப்பத்தில் அச் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. செயற்றிட்டத்திற்கான வளங்களை அடையாளம் காணல், செயற்றிட்ட முகாமையாளரை நியமித்தல் போன்ற செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

- செயற்றிட்ட திட்டமிடல்:- திட்டமிடல் என்பது எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக முன்கூட்டிய ஏற்பாடாகும்.இப் படிமுறையில் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய ஒவ்வொரு நடவடிக்கைகளும் முன்கூட்டியே தீர்மானிக்கப்படும்.ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் இன்றியமையாத படிமுறையாக இத்திட்டமிடல் படிமுறை காணப்படுகின்றது.

- செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் :- செயற்றிட்டம் நீண்ட காலத்தினை கொண்டு இருப்பதனால் குறித்தகாலத்தில் ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப மற்றும் சட்ட மாற்றங்களுக்கேற்ப நடவடிக்கைகள் சீர் செய்யப்பட்டு மேற்கொள்ளப்படுவதன் மூலம் குறித்த செயற்றிட்டத்தின் குறிக்கோள்கள் திட்டமிடப்பட்ட நேரத்தில் சரியான தரத்தில் நிர்ணயிக்கப்பட்ட செலவில் நிறுவப்பட முடியும்.

- செயற்றிட்ட கட்டுப்படுத்தல் :- கட்டுப்படுத்தல் படிமுறை என்பது செயற்றிட்டமானது ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட நோக்கத்தை அடைந்துள்ளதா? அல்லது திட்டத்திற்கும் நடைமுறைக்குமிடையில் ஏதாவது விலகல்கள் காணப்படுகின்றதா? ஏதேனும் ஏற்கக்கூடிய மாறுபாடுகள் காணப்படுமிடத்து மீண்டும் சரியான படிமுறைக்கூடாக செயற்றிட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

- செயற்றிட்ட முடிவுறுத்தல் :- செயற்றிட்டத்தை ஒரு ஒழுங்குமுறைப்படி முடிவுக்குக் கொண்டு வருவதனை முடிவுறுத்தல் படிமுறை கூறுகின்றது. அதாவது செயற்றிட்டமானது குறித்த நோக்கம் அடையப்பட்டதும் முடிவுக்கு கொண்டு வரப்படும்.

இவ் PRINCE அணுமுறையானது பல்வேறுபட்ட நன்மைகளை முகாமையா-ளர்களுக்கும், நிறுவனங்களுக்கும், செயற்றிட்ட அங்கத்தினர்களுக்கும் வழங்குகின்றது.

- செயற்றிட்டத்திற்கு வரையறுக்கப்பட்டதும் பயன்படுத்தப்படும் வளங்களை கட்டுப்படுத்தலாம்.
- வியாபாரத்தை வினைத்திறனாக முகாமை செய்யலாம்.
- செயற்றிட்ட இடர்களையும் நிச்சயமற்ற தன்மைகளையும் இலகுவாக முகாமை செய்யலாம்.
- செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவம், நிறுவனம் ஆகியவற்றிற்கிடையில் சிறந்த தொடர்பாடல் காணப்படும்.

PRINCE அணுகுமுறையானது பல்வேறுபட்ட நன்மைகளை வழங்கினாலும் செயற்றிட்ட முகாமைத்துவத்திலுள்ள முழுப்பகுதியினையும் உள்ளடக்கவில்லை. எனவே தற்காலத்தில் செயற்றிட்ட முகாமைத்துவத்தின் அனைத்து பகுதிகளும் உள்ளடக்கிய செயற்றிட்ட அணுகுமுறைகளினூடாக செயற்றிட்ட முகாமையாளர்கள் செயற்றிட்டங்களை வினைத்திறனாக உருவாக்க முடியும்.


# Royal Construction

**Building Construction, Civil Engineering and General Constructions**

No. 323, Ehamparam Road,
Trincomalee.

- Preparation fo Estimates.
- Suppliers of Construction Materials and General Transport.
- "Mitsui" Cement Agent.

**"Don't hesitate call us now"**

**Office T.P:** 026-2221085
**Supply Divisions:** 026-2223141
026-2221956
**Fax:** 026-2221085

# உலகை உறுத்தும் ஓசோன்

திரு. எஸ். பிரேம்குமார் (B.Sc.)
இரசாயனவியல் பிரிவு

காலம் காலமாக விஞ்ஞானிகள் பயமுறுத்தும் விடயங்களில் முக்கியமானது ஓசோன் (Ozone) அபாயம். இது பாமர மக்களுக்கு புரியாத பெயராக இருக்கலாம். ஆனால் இதுதான் விஞ்ஞானிகளுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஓசோனுக்கும் விஞ்ஞானிகளுக்கும் இடையிலான நிழல் யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்றோ இது ஒரு அச்சுறுத்தக்கூடிய சிக்கலாக வளர்ந்து விட்டது.

உண்மையில் ஓசோன் என்பது மனித குலத்துக்கு தீங்கு விளைவிப்பது அன்று. மாறாக இயற்கை மனிதனுக்காக விண் மண்டலத்தின் அமைத்துக் கொடுத்திருக்கும் பாதுகாப்புப் படலம்.

**புற – ஊதாக்கதிர் வீச்சு (Ultra violet rays)**

சூரிய ஒளி நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்தாலும், அதன் ஒளிக் கதிர்களில் ஒன்றான புற – ஊதாக் கதிர்களின் (Ultra violet rays) வீச்சு மனித குலத்திற்கும், விலங்குகள், தாவரங்கள் போன்ற பூமியில் உள்ள அனைத்து உயிரினத்திற்கும் நாசம் ஏற்படுத்தும் ஒன்று. இந்த நாசத்தில் இருந்து நம்மைக் காக்கும் நல்ல நண்பன் தான் ஓசோன்.

வான மண்டலத்தின் வெளிப் பகுதியில் விரிந்து படர்ந்து இருக்கும் இந்த ஓசோன் படலம் மூன்று பிராண வாயு மூலக்கூறுகளால் (Three – Oxygen Molecule) ஆனது. சாதாரண பிராண வாயுவில் இரண்டு மூலக்கூறுகள் உள்ளன. ஓசோனில் மட்டும் மூன்று மூலக்கூறுகள் இருக்கின்றன.

சூரியனின் புற ஊதாக்கதிர்கள் பூமியை எட்டாத வண்ணம் தடுக்கிறது இந்த ஓசோன் படலம். அக்கதிர்களின் ஊடுருவும் திறனை செயலிழக்கவும் வைக்கிறது. இத்தகைய ஆற்றல் வாய்ந்த இந்த ஓசோன் படலத்தில் குறிப்பாக அண்டார்டிகாவுக்கு அருகில் உள்ள பகுதியில் அண்மையில் பெரும் சிதைவு ஏற்பட்டிருக்கின்றது. இச் சிதைவுக்குக் காரணம் மனிதன்தான்.

**இரசாயன பொருள்களால் மாசு**

குளிர்சாதனப் பெட்டி – உறைய வைக்கும் சாதனங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் இரசாயன பொருளான 'குளோரோ·ஃப்ளோரோ கார்பன்' (Chloro Fluoro Carbon) மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் பெயிண்ட் மற்றும் மருந்துகளுக்காக உபயோகிக்கப்படும் கார்பன் டெட்ரோ குளோரைட் (Carbon Tetra Chloride) போன்றவை ஓசோன் மண்டலத்தில் உள்ள பிராண வாயு மூலக்கூறுகளை சிதைக்க ஆரம்பித்து விட்டன.
விளைவு தன் தனித்துவத்தை இழந்து நிலை கெட்டு நிராயுத பாணியாகி விட்டது ஓசோன். அது புற ஊதாக் கதிர்களை தடுக்கும் ஆற்றலை இழந்து வருகிறது.

ஓசோன் சிதைவு
இந்த ஓசோன் சிதைவு சமீப காலத்தில் உச்ச நிலையை எட்டிக் கொண்டிருப்பதாகவும், ஓசோனில் உள்ள ஓட்டை பெரிதாக்கிக் கொண்டுள்ளதாகவும் அண்மையில் விஞ்ஞான பணிகள் காரணமாக அண்டார்டிக்காவில் பறந்த உளவு விமானி ஒருவர் கூறியுள்ளார்.

ஓசோன் படலத்தை பாதுக்கும் முயற்சியில் எல்லா நாடுகளும் பாடுபடுகின்றன.

அதற்காக அமைக்கப்பட்டுள்ள 'மாண்ட்ரீல் புரோட்டகால்' (Montreal Protocol) என்ற திட்டத்தில் 92 நாடுகள் கையெழுத்து போட்டுள்ளன.

இரசாயன பொருள்களுக்குத் தடை
அதாவது, ஓசோனை சிதைக்கும் ரசாயனப் பொருள்களை மீண்டும் உபயோகிப்பதை தடை செய்வதும், அழிப்பதுமே இத்திட்டத்தின் நோக்கம்.
'குளோரோ.'.ப்ளோரோ கார்பன்' தவிர மேலும் இரண்டு பொருட்கள் ஓசோனைச் சிதைக்கின்றன. அவை 'ஹேலான், மெதில் குளோரோ.'.பில்'(Methyl Chlorophyll) என்பன. இவற்றையும் தடை செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஹேலான் (Halon)
தீயணைப்புக் கருவியில் உபயோகிக்கப்படும் 'ஹேலான் (Halon) வாயுவையும்' சலவை மற்றும் துப்புறவுக்குப் பயன்படுத்தப்படும் 'மெத்தில் குளோரோ.'.பாமையும்' (Methyl Chloroform) விரைவில் தடை செய்ய திட்டங்கள் தயாராகி உள்ளன. சரியான தருணத்தில் எடுக்கப்பட்டிருக்கும் இந்த முயற்சிகளை விஞ்ஞானிகள் வரவேற்றாலும் அவர்களின் சந்தேகங்கள் இன்னும் தீர்ந்த பாடில்லை.

'குளோரோ.'.ப்ளோரோ கார்பன்' போன்ற ரசாயனப் பொருட்களுக்கு மாற்றாக கண்டறியப்பட்டிருக்கும் 'எச்சி.'.ப்சி' (HCFC) போன்றவையுங்கூட ஓசோனுக்கு தீங்கு விளைவிக்கும் என்றே விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

மெதில் புரோமைட்
ஏற்கனவே பிரச்சனையாக உருவாகி இருக்கும் இந்த ரசாயனப் பொருட்களைத் தவிர இப்போது புதிதாக 'மெதில் புரோமைட்' (Methyl Bromide) என்ற பொருளும் பிரச்சனையை உண்டு பண்ணி இருக்கிறது.

மண் மற்றும் பாதுகாக்கப்பட்ட பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை பூச்சி தொல்லைகளில் இருந்து காக்க மெதில் புரோமைட் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் இப்பொருளின் உற்பத்தி இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. இந்த மெதில் புரோமைட்டும் ஓசோன் படலத்தை சிதைப்பதில் பங்கு வகிப்பதால் பிரச்சினைள் எழுந்துள்ளன.
அறிவியல் அறிவோம் - உலகை பயமுறுத்தும் ஓசோன் படலம்

விளைவுகள்
இந்த ஓசோன் சிதைவுகளினால் மனித குலத்திற்கு ஏற்படக்கூடிய விளைவுகள் மிகவும் மோசமானவை.
தோல் புற்றுநோய், பார்வை இழத்தல், உடலின் எதிர்ப்பு சக்தியை அழிக்கும் பல்வேறுவிதமான தொற்று நோய்கள், ஒவ்வாமை(அலர்ஜி) போன்றவை ஓசோன் ஓட்டையால் ஏற்படக்கூடிய அபாயங்கள்.

"ஓசோனில் நிகழும் ஒரு சதவிகித சிதைவு கிட்டத்தட்ட 50,000 மக்களுக்கு தோல்புற்று நோயை உண்டாக்கும்" என ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் துறை தெரிவிக்கிறது.

அண்டார்டிகாவுக்கு அருகிலுள்ள தென்சிலியில் இத்தகைய நோய்கூறுகள் அதிகம் பரவ ஆரம்பித்து விட்டன என்கிறார் ஓர் ஆராய்ச்சியாளர்.

**கடல் உணவு அழிவு**
மனிதனைத் தவிர மற்ற ஜீவராசிகளையும் இந்த அபாயம் விட்டு வைக்கவில்லை. சூரியனின் புற ஊதாக்கதிர்கள் 'பைட்டோ பிளாங்டன்' (Phyto Plankton) என்னும் கடல் உணவு தாவர வகையை அதிக அளவில் அழித்து விடுகிறது.

பிளாங்டன் அழிவதால் அவற்றை உண்டு வாழும் 'கிரில்' (Krill) எனப்படும் மற்றொரு கடல் உணவும் வெகுவாக அழியும்.
கிரிலை தமது பிரதான உணவாக உட்கொள்ளும் பெங்குவின் (Penguin), Os(Seals), திமிங்கிலம் (Whales), மீன்கள் போன்ற கடல் உயிரினங்கள் உயிர் வாழ பெருமளவு போராட வேண்டியிருக்கும்.

**கார்பன் டை ஆக்சைடு (Carbon Di Oxide)**
பிளாங்டனின் அழிவு இதைவிட வேறொரு மாபெரும் விளைவையும் ஏற்படுத்துகிறது. அது கார்பன் டை ஆக்சைடு (Carbon Di Oxide) அதிகரிப்பது கடல் மேலுள்ள பிளாங்டன் பெருமளவில் அழிவதால் கார்பன் டை ஆக்சைடு கிரகிக்கும் கடலின் ஆற்றல் பாதிக்கப்படுகிறது. இது மற்றொரு வானவெளி பிரச்சனையை – உலகளாவிய வெப்பத்தை உருவாக்குகிறது.

கார்பன் டை ஆக்சைடு அதிகரிப்பதால் சுவீடன், நார்வே, பின்லாந்து, கனடா, மற்றும் ஜப்பான் நாடுகளின் மேலுள்ள ஓசோன் படலம் சிதையும் நிலையில் இருக்கிறது.

மனிதனால் உருவாக்கப்பட்ட ரசாயனங்களை தவிர, தட்பவெப்ப நிலைகளும் ஓசோன் சிதைவுக்கு ஒரு வகையில் காரணமாக இருக்கிறது.

கடந்த இரு ஆண்டுகளில் வீசிய புயல் காற்றுகள், பிலிப்பைன்சிலுள்ள பினாடுபோ (Pinatubo) எரிமலை (Volcano) கொந்தளிப்பால் விளைந்த பெரும் புழுதியும் கூட ஓசோன் படலத்தை முன்னை விட மோசமாகப் பாதிக்கவே செய்திருக்கின்றன.

**பச்சைவீட்டுத் தாக்கம் (Green House Effect)**
நம் வாழ்வை சொகுசாக்கிக் கொள்ள நாம் நிறைய விஞ்ஞான சாதனைகளை செய்திருக்கிறோம். அவற்றில் சில வளத்தை தந்திருக்கின்றன. சில பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

நிலக்கரி, பெட்ரோல், டீசல், எரிவாயு இவற்றை நாம் பல்வேறு நாகரிகக் காரணங்களுக்காக எரிக்கும் போது காற்றில் அதிகரிக்கும் கார்பன் டை ஆக்சைடு 'இன்.ஃப்ராரெட்' (Infra-Red) என்று சொல்லப்படும் வெப்ப அலைகளை ஈர்க்க வல்லது.

இதனால் பூமியில் இருந்து புறப்படும் வெப்பம் தடுக்கப்படுகிறது. பூமி சூடாகிறது. இவ்வாறு உலகில் சராசரி வெப்பம் 30 ஆண்டுகளுக்கு ஒரு டிகிரி அதிகமாகிறது. இதற்கு 'கிரீன் பச்சைவீட்டுத் தாக்கம் (Green House Effect) என்று பெயர்

# நேரம் தவறாமை

திருமதி.ச.தயாளன் (தாவரவியல் பிரிவு)

நேரந் தவறாமை என்பது வெற்றியின் ரகசியம். வெற்றிக்கு உரியவர்கள் பலரிடமும் கேட்டுப்பார்த்தீர்களானால் நேரந்தவறாமை தான் இந்த அற்புதத்தை நிகழ்த்தியதாக பெருமைப்பட்டுக் கொள்வார்கள். இந்த நேரந்தவறாமை என்பது அதிர்சியூட்டும் விடயம் அல்ல. இயல்பாகவே அது ரத்த ஓட்டத்தில் கலந்திருந்தால் மட்டுமே அதை நடைமுறைப்படுத்த முடியும்.

இது ஏதோ பணம் கொடுத்து வாங்கக்கூடிய விஷயமானால் பரவாயில்லை. பலரும் வாங்கிவிட முயல்வார்கள். இது மனம் கொடுத்து வாங்க வேண்டிய விஷயம். எட்டு மணிக்கு ஒருவரை சந்திக்க நேரம் ஒதுக்கியிருந்தால் என்றால் ஒன்பது மணிக்கு கூட குற்றவுணர்வு இல்லாமல் போகிறவர்களை இதில் நாமாக எதுவும் செய்து விட முடியாது. குழந்தைப்பருவத்தில் இருந்தே இதை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே இது செயல் வடிவம் பெறும்.

குழந்தைகளுக்கு இந்த விஷயத்தை பதிய வைப்பதற்கு என்ன செய்யலாம்? குழந்தைகள் எப்போதுமே அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள். உருட்டி மிரட்டி அவர்களிடம் வேலை வாங்குவது என்பது நடவாத விஷயம். இயல்பாகவும் அமையாது. அன்பாக உணர்த்தினால் புரிந்து கொள்வார்கள். எந்தெந்த வகைகளில் குழந்தைகளை நேர உணர்வு மிக்கவர்களாக்கலாம்?

அதிகாலையில் குறிப்பிட்ட நேரத்தில் விழிக்கப் பழக்கலாம். இந்த நேரம் படிக்கவேண்டும். இந்த நேரம் விளையாட வேண்டும். இந்த நேரம் தொலைக்காட்சி பார்க்கலாம் என்று நாமாகவே ஒரு பட்டியல் போட்டு அதன்படி குழந்தைகளை தயார்செய்யலாம்.

விடுமுறை நாட்களை வெறும் பொழுது போக்கும் நாட்களாக மட்டுமே கருதும் எண்ணம் அவர்களிடம் வந்து விடக்கூடாது. பாடங்களை மனப்பாடம் செய்ய இந்த நாட்களின் பெரும் பகுதி நேரத்தை பயன்படுத்த வைக்கலாம். இதை குழந்தைகளாகவே உற்சாகத்துடன் செய்யும் அளவுக்கு அவர்களை தயார் செய்துவிடுவதில் தான் உங்கள் வெற்றி இருக்கிறது.

காலம் பொன் போன்றது. அதை ஒருபோதும் வீணாக்கக்கூடாது என்ற எண்ணத்தை மறைமுகமாக ஏற்படுத்தலாம். குறிப்பாக இந்த நேரத்திற்குள் இந்த வேலையை முடித்து விட வேண்டும் என்கிற மாதிரியான உணர்வுகள் குழந்தைகளின்

உணர்வுகளுடன் கலந்து விட வேண்டும். இளம் வயதில் உழைத்து முன்னேறிய சாதனையாளர்களின் வாழ்க்கை பற்றிய புத்தகங்களை சிறுவர்களுக்கு படிக்கக்கொடுத்து. இவர்களின் வெற்றிக்கெல்லாம் காரணம் நேரந்தவறாமைதான் என்பதை அவர்கள் மனதில் பதியமிடலாம்.

காலை நேரத்தில் ஒரு அரை மணி நேரமாவது படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தலாம். இதற்கு முன்னோடியாக முதல் நாள் இரவே பாட புத்தகம் எடுத்து வைத்தல், சீருடைகள், புத்தகங்கள், காலணிகள் போன்றவற்றை தயார் நிலையில் வைத்தல் என்று பழக்கப்படுத்திக் கொள்ளும் போது, மறுநாள் காலையில் அரை மணி நேரம் படிக்க நிச்சயம் வாய்ப்பு கிடைக்கும். இதோடு மட்டுமின்றி அதிகாலை படிப்பது மனதில் சீக்கிரம் பதியும் என்ற விஷயத்தையும் அவர்கள் காதில் போட்டுவைக்க வேண்டும். இதற்கு நிச்சயம் பலன் இருக்கும்.

போனில் அதிக நேரம் அரட்டை, இன்டர்நெட்டில் பொழுதைப் போக்குதல் தொடர்ந்தும் தொலைக்காட்சி பார்த்தல் போன்ற விடயங்கள் நேரத்தைப் பாழ்படுத்தும் செயல்கள் என்பதை பக்குவமாக சொல்லிவிட வேண்டும்.

குழந்தைகளை இப்படிப்பழக்குவிக்கும் போது இதே ரீதியில் தான் அவர்கள் வளருவார்கள். நேரத்தை மதிக்கும் உணர்வு மட்டும் அவர்களிடம் ஏற்பட்டு விட்டால் கடமை உணர்வு, ஒழுங்கு, கட்டுப்பாடு போன்ற நற்பண்புகள் தானாக அவர்களிடம் குடிகொண்டு விடும்.

---

(29ம் பக்க தொடர்ச்சி)

சும்மா இருந்த குயிலை காகம் தானே வலியச் சென்று சண்டைக்கு இழுத்தது. காகத்தின் மீது நான் ஏன் பரிதாபப்பட வேண்டும்? வினை விதைத்தவன் தினை அறுக்கமுடியுமா? என் மனச்சாட்சி வேறு இந்த நேரத்தில் பேச ஆரம்பித்துவிட்டது. காகத்தின் அலறலும், அலறினால் கூடிய காக்காக் கூட்டத்தின் இரைச்சலும் "அது ஓர் உயிரினம்! வாழத்துடிகிறது" என்று என் மனசாட்சியைக் கட்டுப்படுத்திவிட்டன. அருகில் கிடந்த செங்கல்லுப்பாதியை எடுக்கிறேன். பூனை மீது குறிவைத்து எறிகிறேன்: கல் குறி தவறாமல் பூனையின் வாயிற்றை பதம் பார்க்கிறது. பூனை 'மியாவ்....மியாவ்...மியாவ்....' என்ற பேரலறலுடன் வாயைப்பிளக்க சிறை மீண்ட செம்மலாக காகம் கா...கா... கா.. என்று மகிழ்ச்சியுடன் கரைந்து வானில் பறக்கிறது. (இவற்றையெல்லாம் 'ஸ்லோ மோசனில் நீங்கள் கற்பனை செய்து பார்த்தால் நன்றாக இருக்கும்.) பூனைக்கு நல்ல அடி பாவம்! கொஞ்சம் வலிதான் வலி தாங்க முடியாமல் கம்பி வேலியால் புகுந்து அடுத்த வளவுக்குள் ஓடி பாதுகாப்பு எல்லைக்கு வந்த பின் தன் வயிற்றை நாவால் நக்குகிறது பூனை . உயிர் மீண்ட காகம் ஒரு ' தாங்ஸ்' கூட சொல்லாமல் பறந்துவிட்டதே! ஏன்! மனிதர்களில் கூட இப்படியானவர்கள் இருக்கும் போது காக்கைதான் எம்மாத்திரம்!

---

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 41

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | ■ | 9 | |
| 10 | | 11 | | | ■ | 12 | |
| 13 | | | ■ | 14 | | | |
| | ■ | 15 | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | | 19 | | ■ |
| 20 | 21 | | | ■ | | ■ | 22 |
| ■ | 23 | | | | | | |

பெயர்: ................................

................................

முகவரி: ................................

................................

கையொப்பம்: ................................

முடிவுத்திகதி: 31.10.2008.

- இப்பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

-------------------------- இங்கே வெட்டவும் --------------------------

**இடமிருந்து வலம்**

01. விபுலாநந்தர் இயற்றிய நூல்களில் ஒன்று
07. நுரையீரல் சம்பந்தமான நோய்
08. கடைசி எழுத்து இருந்தால்தவறு
09. நறுமலர் இப்படி இப்படி மணம் வீசும்
10. ஒரு பாடலில் பல ராகங்களும் தொடர்ந்து பாடும் ராகத்தொடர்
12. நால் வகைப்படைகளில் ஒன்று
13. சோதிடம் -3ம், 4ம் எழுத்துக்கள் மறைய குழம்பிவிட்டது.
14. மனிதர் குழம்பிக்கிடக்கின்றனர்
15. உறவினர் கடைசி 2 எழுத்துக்களும் மறைய குழம்பிவிட்டனர்
17. தந்திரம், பேராசை, தாகம்
18. துலக்கம், பகிரங்கம், நடு எழுத்து மறைந்து விட்டது
20. நவரத்தினங்களில் ஒன்று நேர்மாறாக உள்ளது
23. கஷ்டத்தைக் குறிக்கும் ஓர் அடுக்குத்தொடர். இதில் 3ம்,4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.

**மேலிருந்து கீழ்**

01. அர்த்த சாமம்
02. பத்து
03. ஒரு வாழை இனம்
04. இராவணன் தங்கை கொடியவள் ஆதலால் குழம்பிவிட்டாள்
05. தை மாதம்
06. காந்தக்கல் - தலைகீழாக உள்ளது
11. கோவலன் தந்தை
16. நட்டத்திற்கு எதிர்
19. தள்ளுபடி
21. தெய்வாம்சம் பொருந்திய செடியின் கடைசி எழுத்து மறைய தலைகீழாகி விட்டது
22. பூமி

## நீங்காத நினைவுகளில் ....................

எம்முடன் நீண்டகாலமாக பணிபுரிந்து கடந்த வருடம் இறையடிசேர்ந்த

1. அமரர் பி.சுந்தரமூர்த்தி (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவு)
2. மர்ஹூம் **A.H.M.**அமீன் (நிதிப்பிரிவு),
3. அமரர் வே.பிரம்மநாயகம் (நூலகம்)

இவ்வருடத்தில் இறையடி சேர்ந்த

அமரர் **என்.கனகசுந்தரம்** (கணிதப் பிரிவு) ஆகியோரை கிழக்கொளி நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளது.

அவ்வாறே மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் முதலாவது பணிப்பாளராக பணியாற்றி லண்டன் மாநகரில் அமரராகிய **பேராசிரியர் ரோணி இராஜரெட்ணம்**

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் இரண்டாவது செயலாளராக பணியாற்றி லண்டன் மாநகரில் அமரராகிய **அமரர் வி.சங்காரவேல்** ஆகியோரையும் கிழக்கொளி நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளது.

எம்முடன் பணியாற்றி அமரர்களான அனைவரினதும் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓய்வுபெற்றோர்**

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல வருடங்கள் கடமையாற்றி கடந்த வருடத்தில் பின்வருவோர் ஓவ்வுபெற்றுச் சென்றனர்.

1. திரு.**V.**கந்தசாமி **(1981 – 2007)**
2. திரு.**M.**விவேகானந்தன் **(1985 – 2007)**
3. திரு. **R.P.**செல்வராஜா **(1987 – 2007)**
4. **திரு.E.**அவுட்ஸ்கோன்.**(1999 – 2007)**

ஓய்வுபெற்றுச்சென்றுள்ள எமது சகஊழியர்களின் ஓய்வுகாலம் சுகமானதாக அமைய வாழ்த்துகின்றோம்.


**வாழ்த்துகின்றோம்**

கிழக்குப் பல்கலைக் கழக நிதிப்பிரிவில் கணக்குப் பதியுனராகக் கடமையாற்றி, உதவி நிதியாளராகப் பதவி உயர்வுபெற்ற திரு.எஸ்.பிரமாகரன் அவர்களை கிழக்கொளி வாழ்த்துகின்றது.

*தகவல்:* **ஆ.நிர்மோகன்**

# ஆங்கில குறுக்கெழுத்துப் போட்டி இல - 01

- விடைகளை இப்பத்திரத்தில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். சரியான விடைகளை அனுப்பும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசுகள் காத்திருக்கின்றன. கிடைக்க வேண்டிய இறுதித் தினம்.
- 31.10.2008



**மேலிருந்து கீழ்**


01. இந்திய சகல துறை_கிரிக்கெற் வீரர்
02. ஊர்வன இன விலங்கொன்று
03. உலக வரைபில் ஓர் இடத்தை அறிய இதுவும் உதவும்
04. தென் அமெரிக்காவிலுள்ள பெரும் புல்வெளி
05. வெளியே என்பதன் எதிர்
06. ஒரு மாதம்
07. மனித இனங்கள் பற்றி ஆராயும் அறிவியல் துறை
08. இறந்தவர்களுடைய ஆத்மாவுடன் பேசும் கலை
11. நோயை உண்டாக்கும் மருந்தால் அதே நோயை குணமாக்கும் சிகிச்சை முறை
13. இயற்கை அனர்த்தங்களுக்குப் பேர்போன நாடு
14. ரென்னிஸ் விளையாட்டில் தற்காலத்தில் பேர்போன மங்கை
16. இதை அடைந்திருந்ததால் தனது பெயரை புகழின் உச்சிக்கு ஏற்றியவர்
17. கண்டுபிடிப்புக்களின் தந்தை இவர்
18. இரக்கம் அல்லது வருத்தத்தைத் தெரிவிக்கும் சொல்
21. மிருகங்களின் மறைவிடம்.

**இடமிருந்து வலம்**

01. தென் கிழக்காசிய நாடு ஒன்று
09. ஆபிரிக்க நாடுகளில் ஒன்று
10. ஓர் ஆங்கில எழுத்து வடிவத்தில் வெட்டுதல்
12. பேரழிவை உண்டாக்கும் ஓர் இயற்கை அனர்த்தம்
15. இந்துமத கொள்கையின் படி தீக்குரிய கடவுள்
19. கல்லீரல்
20. உடலை எரித்த பின் இறுதியில் இது ஒரு பிடி மண்
22. விம்மல்
23. அடிமை வியாபாரி
24. ஒரு திசை
25. சதா தொந்தரவு செய்

உங்களது வீடுகள், பாடசாலைகள்,
காரியாலயங்கள் அனைத்துக்கும் தேவையான
தளபாடங்கள், கூரைகள், யன்னல்கள், நிலைகள்
போன்றவற்றிற்குத் தேவையான அரிந்த மரங்கள்,
பலகைகள், கதவுகள், கட்டில்கள், மெத்தைகள்
போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெறுவதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# "மெகாவூட்"



# "MEGA WOOD"

(License No. TO/315)

00, பிரதான வீதி
ஞ்சந்தொடுவாய், காத்தான்குடி.
த்தான்குடி வரவேற்புக் கோபுரத்தின் கீழ்)

**500, Main Street**
**Manchanthoduwai**
**Kattankudy.**

Phone No. : 065-2246644, 065-4902383

With Best Compliments From

# Sakthi Construction

## Building Construction and General Contractors



**Preparation of Estimates**

**Suppliers of Construction Materials and General Transport**

# SAKTHI CONSTRUCTION
# TRINCOMALEE